மே, 2023

ஆம்பல் தமிழ்ச்சங்கம்

ஆம்பலின்

# இலக்கியச் சங்கமம்

மாத இதழ்








## மே மாத சிறப்பிதழ்





www.aambaltamilsangam.com

ஆம்பலின்

# இலக்கியச் சங்கமம்

## ஆக்கமும் நோக்கமும்

அன்புத் தோழமைகளுக்கு வணக்கம்.

உழைப்பாளர்கள் தினம் உள்ளிட்ட பல்வேறு சிறப்புகளை உள்ளடக்கிய மே மாதத்தில் ஆம்பலின் இலக்கியச் சங்கமம் இரண்டாம் இதழ் வெளியாவதில் மகிழ்ச்சி அடைகிறோம். செந்தமிழின் செழுமையில், பழமைக்கும் புதுமைக்கும் பாலமாய், இளமைத்தூண்களுக்கு தன்னம்பிக்கை ஊற்றாய், மரபு காக்கும் மண்ணின் பெருமையாய் இலக்கியச் சங்கமத்துள் திளைத்திடச் செய்யும் வகையில் இவ்விதழ் மாத இதழாக வெளிவருகிறது.

கைவிரல் கொண்டு மணலில் எழுதிய நம் பாட்டன் தொடங்கி பாறைகள், கற்கள், தகடுகள், சுவடிகள் என்று நல்ல எண்ணங்களையும் அனுபவங்களையும் அறிவையும் அவற்றில் எழுதி பதித்து பாதைகளை உருவாக்கிச் சென்ற முன்னோர்களை வணங்குகிறோம்.

படிப்பாளிகளுக்கு தரமான தகவல்களைத் தரும் தளமாகவும், படைப்பாளர்களை **"வாருங்கள்! உங்கள் பேனா முனை கூர்மையின் பலத்தை உணர்ந்து உங்கள் எண்ணத்தின் வண்ணங்களை எழுத்துத் தூரிகைகளை இலக்கிய சங்கமத்தில் கலந்து இதழில் இடம்பிடித்து வரலாற்றில் தடம் பதிக்க வாருங்கள்"**என்ற வாழ்த்துகளோடும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

கனவை நனவாக்க அருள் செய்த இறைவன் திருவடி பணிந்து, உடனிருந்து உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

வளமான சமுதாயத்தின் வழித்தோன்றலுக்காக வித்தாய் இலக்கியச் சங்கமம்.

என்றும் அன்புடன்...



திருமதி. கு. திலகவதி
மாநிலத் தலைவர்
ஆம்பல் தமிழ்ச்சங்கம்



முனைவர். ரவி கோவிந்தராஜ்
நிறுவனர்
ஆம்பல் தமிழ்ச்சங்கம்

# இற்றைத் திங்கள் இவ்விதழில்...

1.மே தினம் வரலாறு
2.கவிச்சாரல்கள்
3.பசியும் பிசியாற்றும்
4.ஊரும் பேரும்
5.உண்மையில் வெற்றி பெற
6.அன்னையர் தினம்
7.தந்தையர்தினம்
9.நில் கவனி செல்
10.உடலினை உறுதி செய்
11.ஆயுள் காப்பீடு
12.பயணங்கள் முடிவதில்லை
13.வலி நிறைந்த வழி
14.பெற்றோரும் பிள்ளைகளும்
15.ஆய்வுக் களம்
16.ஊர் சுற்றலாம் வாங்க
17.மூளைக்கு வேலை
19.பெண்ணியம்
20.என்ன படிக்கலாம்?
21.World Tele Communication day
22.Our Nurses Our Future
23.Hope for the Best
24.Grammar Games
25.விடையளியுங்கள்

# மே தின வரலாறு

முனைவர். நளினி பார்த்தசாரதி
கர்நாடக ஆம்பல் தமிழ்ச்சங்கம்



சில தினங்களுக்குப் பின்னால் காரணங்கள் உண்டு. ஆனால் சில தினங்களுக்குப் பின்னால் வரலாறே உண்டு. மே தினத்திற்குப் பின்னால் அப்படி ரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறு உண்டு.

மே 1. சர்வதேச தொழிலாளர் தினம்.. சுதந்திர தினம், அன்னையர் தினம், காதலர் தினம் தொடங்கி முட்டாள்கள் தினம் வரை அனைத்திற்கும் நாம் ஒவ்வொரு தினம் கொண்டாடுகிறோம். சில தினங்களுக்குப் பின்னால் காரணங்கள் உண்டு. ஆனால் சில தினங்களுக்குப் பின்னால் வரலாறே உண்டு. மே தினத்திற்குப் பின்னால் அப்படி ரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறு உண்டு.

நாடோடியாக இருந்த மனிதன் உழைப்பின் மூலமாகவே இன்று நவ நாகரீகமாக வாழப் பரிணாமம் அடைந்தான். ஆனால் உழைப்பாளிகளுக்கு அவர்களின் உழைப்புக்கான பிரதிபலன் கிடைக்கிறதா என்பது இன்றளவும் கேள்விக்குறியே. 8 மணி வேலை, அடிப்படை ஊதியம், தொழிலாளர் வைப்பு நிதி, காப்பீடு, பெண்களுக்குப் பணியிடத்தில் கிடைக்கும் உரிமைகள், தொழிற்சங்கங்கள் என இன்று நாம் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளுக்கும் மே தினப் போராட்டமே விதையாய் அமைந்தது. ஒவ்வோர் ஆண்டும் மே முதல் நாள் உழைக்கும் மக்களின் நாளாக, சர்வதேச தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. எப்போதும் ஓய்வின்றி உழைக்கும் மக்களின் ஓய்வுக்காக இந்நாள் விடுமுறை தினமாக்கப்பட்டது.

நாம் இன்று வாழும் இந்த நவீன யுகம் ஆண்டாண்டு காலமாய் உழைத்துக் கொண்டிருக்கிற பாட்டாளி வர்க்கத்தின் வியர்வைத் துளிகளால் கட்டமைக்கப் பட்டிருக்கிறது. இவர்களுக்கான ஒரு தினம் என்பது எவ்வளவு கொண்டாட்டமாக இருக்க வேண்டும். ஆனால், மிகுந்த போராட்டங்களுக்கும் வலிகளுக்கும் பிறகே வரலாறு தொழிலாளர்களுக்கென ஒரு தினம் கொண்டாட அனுமதித்தது. ஆம், அத்தனை சுலபமாக கடந்துவிடக் கூடிய போராட்டங்கள் இல்லை அவை.

பத்தொன்பதாம் நூற்றாண்டு, நாடுகள் ஒன்றையொன்று முந்திக் கொண்டு தொழில்துறையில் ஜாம்பவான்களாக முயன்று கொண்டிருந்த காலம். முதலாளிகளால் தொழிலாளர்கள் சக்கையாகப் பிழியப்பட்டனர். வேலை செய்யும் இடங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்புக்கோ, நலனுக்கோ முக்கியத்துவம் தரப்படாமல் இருந்த காலகட்டம் அது. சர்வசாதாரணமாக பதினெட்டிலிருந்து இருபது மணிநேர வேலை தொழிலாளர்கள் மீது நிர்பந்திக்கப்பட்டது.

அந்தச் சூழலிலும் அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் தரப்படாமல் மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. இந்த அநியாயத்தை எதிர்த்து தொழிலாளர்கள் அமெரிக்காவில் போர்க்கொடி தூக்கினர். வேலைநிறுத்தங்களிலும் ஈடுபடத் தொடங்கினர். தொடக்கத்தில் இந்த வேலை நிறுத்தங்களின் பிரதானக் கோரிக்கை `அதிக ஊதியம்' என்பதே. ஆனால், வேலை நேரத்தைக் குறைப்பதன் மூலம்தான் தாங்கள் சுரண்டப்படுவதைத் தவிர்க்க முடியும் என்பதை உணர்ந்த தொழிலாளர்களின் போராட்டங்கள் வேலை நேர குறைப்புக்கான கோரிக்கையாக வலுக்கத்

தொடங்கியது.

1806-ம் ஆண்டில் அமெரிக்காவின் பிலடெல்பியா நகரத்தின் தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்ட போதுதான் தொழிலாளர்களின் கஷ்டங்களும் அவர்களின் உழைப்பின் மீதான சுரண்டலும் உலகுக்குப் புரிய ஆரம்பித்தது. இந்த நகரின் இயந்திரத் தொழிலாளர்கள் ஆரம்பித்த சங்கம்தான் உலகின் முதல் தொழிலாளர் சங்கம் என்கிறது வரலாறு.

1820, 1830-ம் ஆண்டுகளில் பத்து மணிநேர வேலை நேரம் என்கிற கோரிக்கையை வகுத்து நிர்வாகத்திடம் போராடினர் தொழிலாள வர்க்கத்தினர். வேன் பியுரன் தலைமையிலான அமெரிக்க அரசாங்கம் தன் முதல்படியை எடுத்து வைத்தது. அதன்படி அரசாங்க ஊழியர்களின் வேலைநேரம் பத்து மணிநேரமாகக் குறைக்கப்பட்டது. ஆனால், தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோருக்கு இது எந்தவித பலனையும் அளிக்கவில்லை. அனைவருக்கும் பத்து மணிநேர வேலை என்கிற தங்களின் கோரிக்கையோடு தொழிலாளர்கள் தொடர்ந்து போராடினர்.

கார்ல் மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்ஸின் கடுமையான உழைப்பில் உருவான கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை (Communist Manifesto) பாட்டாளி வர்க்கத்திடம் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. மார்க்ஸ் ``உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்; நீங்கள் இழப்பதற்கு எதுவுமில்லை. பெறுவதற்கோ பொன்னான ஒரு உலகம் காத்திருக்கிறது" என அறைகூவல் விடுத்தார். அவரின் இந்தப் பிரபல வாக்கியம் பல தொழிலாளர்கள் ஒன்றுபடுவதற்கும் பின்னாளில் வரலாறு படைக்கவும் காரணமாக இருந்தது.

1850-களில் பல இடங்களில் தொழிற்சங்கங்கள் தோன்றியிருந்தன. பத்து மணிநேர கோரிக்கை இச்சங்கங்களின் அறிவுறுத்தல்களால் எட்டு மணி நேர வேலைக்கான கோரிக்கையாக மாறியது. அமெரிக்கா மட்டுமன்றி எங்கெல்லாம் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறதோ அங்கெல்லாம் கிளர்ந்தெழுந்தனர் தொழிலாளர்கள். குறிப்பாக, ஆஸ்திரேலியாவின் கட்டடத் தொழிலாளர்கள், `8 மணி நேர வேலை, 8 மணி நேர பொழுது போக்கு, 8 மணி நேர ஓய்வு" என்கிற தங்கள் கோரிக்கையை முன்வைத்துப் போராடி வெற்றியும் கண்டனர். இவ்வெற்றி உலகின் அத்தனை தொழிலார்களுக்கும் போராடினால் வெற்றி கிட்டும் என்கிற உத்வேகத்தை அளித்தது.

அமெரிக்காவில் அனைத்து தொழிலாளர்களுக்குமான ஒருங்கிணைந்த சங்கத்தின் தேவையை உணர்ந்து 1866-ல் தேசிய தொழிலாளர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அந்த ஆண்டு பால்டிமரில் நடந்த சங்க மாநாட்டில் 8 மணிநேர வேலை நாளை முன்மொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் தலைவராக வில்லியம் சில்விஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவின் இந்த தேசிய தொழிலாளர் சங்கத்தைப் போன்றே லண்டனில் ஃபர்ஸ்ட் இன்டர்நேஷனல்" என பொதுவாக அறியப்படும் சர்வதேச தொழிலாளி சங்கம்' 1866-ல் ஜெனிவாவில் 8 மணிநேர வேலை நாளுக்கான தீர்மானத்தை நிறைவேற்றியது. இப்படியாக இந்த இரு அமைப்புகளும் ஒரே கொள்கைகளோடு செயல்பட்டு வந்தன.

`வேலை நாளுக்கு சட்டபூர்வமான அளவு முதலாவது தேவையாகும். இது இல்லாமல் தொழிலாளி வர்க்க முன்னேற்றம் மற்றும் விடுதலைக்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் முழுமையாக இருக்காது.... வேலை நாளுக்கான சட்டபூர்வ அளவு எட்டு மணி நேரமாக இருக்க வேண்டும் என்றும் இம்மாநாடு முன்மொழிகிறது" என எட்டுமணி நேர இயக்கத்தைக் குறித்துக் கார்ல் மார்க்ஸ் 1867-ல் வெளியான தனது மூலதனம் புத்தகத்தில் வேலை நாள் குறித்து' எனும் தலைப்பின் கீழ் குறிப்பிடுகிறார்.

பல வருடங்களாகப் போராடிப் பார்த்த தொழிலாளர்கள் 1886-ம் ஆண்டில், தங்களின் கடைசி ஆயுதமாய் வேலை நிறுத்தம் செய்ய முடிவெடுத்தனர். இதற்காக அவர்கள் மே 1-ம் தேதியைத் தேர்ந்தெடுத்தனர். தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருந்த காலகட்டம் அது. இப்போராட்டங்களின் மையப்பகுதியாக சிகாகோ இருந்தது. முதலாளித்துவத்தின் மீதான வெறுப்பு நாடு முழுவதும் பரவி புரட்சிக்கான உணர்வோடு உழைக்கும் வர்க்கத்தினர் இருந்தனர். தங்களின் தொழிற்கருவிகளை கீழே வைத்துவிட்டு சாலையை நோக்கித் திரண்டு வந்த தொழிலாளர்களின் படை உலகையே

திரும்பிப் பார்க்கவைத்தது. 8 மணிநேர வேலை நாள் என்கிற கோஷம் விண்ணைப்பிளந்தது. ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் திரண்டெழுந்து தொழிலாள வர்க்கத்தின் மொத்தப் போராட்ட வரலாற்றையும் மே 1 என்கிற இந்த ஒற்றை நாளில் தூக்கி நிறுத்தினர். புதிய அத்தியாயம் எழுதப்பட்டது.

ஆனால், அரசும் முதலாளிகளும் இதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கவில்லை. வன்முறை கட்டவிழ்க்கப்பட்டது. போராடியவர்கள் கைது செய்யப்பட்டனர். தடியடி நடத்தி கூட்டம் கலைக்கப்பட்டது. இரண்டு நாள்கள் கழிந்து அரசின் அடக்குமுறையைக் கண்டித்து மே 4-ம் தேதி, ஹே மார்க்கெட் (Hay market) சதுக்கத்தில் கண்டன கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. அமைதியாகக் கூடிய மக்கள், தலைவர்களின் பேச்சுகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தனர். வன்முறை நடக்க வாய்ப்பேயில்லை என அங்கிருந்தவர்கள் நம்பிக்கொண்டிருக்க எங்கிருந்தோ எறியப்பட்ட குண்டு ஒன்று ராணுவ அதிகாரி ஒருவரைக் கொன்றது.

யார் இதைச் செய்தது என்பதைக் கூட விசாரிக்காமல் காவலர்கள் கூட்டத்தினரை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். இதில் பதினைந்து தொழிலாளர்கள் பலியானார்கள். நான்கு பேருக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. இச்சம்பவம் தொழிலாளர்களின் போராட்ட வரலாற்றில் மிகமுக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஃபர்ஸ்ட் இன்டர்நேஷனல் கலைக்கப்பட்டு சோஷலிச மற்றும் தொழிலாளர் கட்சிகளால் இரண்டாம் இன்டர்நேஷனல் தோற்றுவிக்கப்பட்டது. 1891-ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் இன்டர்நேஷனலின் தீர்மானம்படி மே 1-ம் நாள் சிகாகோ போராட்டத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் சர்வதேச தொழிலாளர்கள் தினமாக அறிவிக்கப்பட்டது. தொழிலாளர்களின் உழைப்பை உலக மக்கள் அனைவரும் அறியும் நாளாக இந்த நாள் பார்க்கப்பட்டது.

தற்போது 80 நாடுகளுக்கும் மேல் மே 1 தேசிய விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் போராட்டங்களில் கவனம் ஈர்த்த அமெரிக்காவானது செப்டம்பரின் முதல் திங்களன்று தொழிலாளர் தினத்தை கொண்டாடுகிறது.

இந்தியாவில் முதன்முறையாக 1923-ம் ஆண்டு சிங்காரவேலர் என்கிற தமிழர் மே தினத்தை மெரினாவில் செங்கொடி ஏற்றி கொண்டாடியுள்ளார். 1957 வரை இந்த தினம் விடுமுறை நாளாக இந்தியாவில் அறிவிக்கப்படவில்லை. 1957-ல் கேரளாவில் ஆட்சிக்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சி சர்வதேச தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு விடுமுறை நாளாக மே முதல் நாளை அறிவித்தது.

இந்த நாளின் நினைவாக மெரினாவில் அண்ணா சதுக்கத்தின் எதிரில் இருக்கும் உழைப்பாளிகள் சிலை 1959-ம் ஆண்டு எழுப்பப்பட்டது. உழைக்கும் நான்கு மனிதர்கள் சிலையில், இரண்டு மற்றும் நான்காவது மனிதர்களுக்கு, அரசு கலைக்கல்லூரியின் நைட்வாட்ச்மேன் மாடலாக இருந்தார் என்பது கூடுதல் சிறப்பு.

இதுமட்டுமன்றி சென்னையில் உள்ள நேப்பியர் பூங்கா 1990-ம் ஆண்டு மேதின பூங்கா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தொழிலாளர்களும் அவர்களது உழைப்பும்தான் இப்பூவுலகின் இயக்கத்தை நின்றுவிடாமல் சுழல வைக்கிறது. உலகில் மிகப்புனிதம் என ஒன்று இருக்குமென்றால் அது தொழிலாளர்களின் வியர்வைத் துளிகளேயன்றி வேறெதுவாக இருந்துவிட முடியும்!

உழைக்கும் மக்களின் சிறப்பை உலகுக்கு பறைசாற்றும் உன்னத தினமான மே தினத்தில், உலகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் உளங்கனிந்த ‘மேதின' நல்வாழ்த்துகள். தேசத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் தொழிலாளர் பெருமக்கள் அனைவரும், எல்லா நலன்களையும், வளங்களையும் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.



# ஆர்ப்பரிக்கும் உன் நினைவலைகள்



*ப்ரியமானவளே...*

*என் நெஞ்சினில் ததும்பி*
*கொண்டு இருக்கும்...*

*உன் அழகிய நினைவுகளை*
*தினம் தினம் அசைபோடுகிறேன்...*

*என்னோடு பேசும் உன்*
*விழிகளை காண துடிக்கிறேன்...*

*உன்னைக்கண்டாலே எனக்குள்*
*ஆர்ப்பரிக்கும் ஆசைகளை...*

*நான்*
*எப்படி சொல்வேன்...*

*தினம் நீ விரும்பி வாசிக்கும்*
*புத்தகத்தின் எழுத்துக்களாக இருந்தால்...*

*உன் கண்களால் ரசிப்பாய்*
*இதழ்களால் உச்சரிப்பாய்...*

*கொக்கி போடும் உன்*
*வார்த்தைகளில் சிக்கிவிட்டேன்...*

*நினைவாக வந்து செல்லும் நீ*
*வாழ்க்கை துணையாக வந்துவிடு...*

*உலகில் எதையும் வெல்வேன்*
*எமனையும் வெல்வேன் உனக்காக.....*

# அழகு



முடி வாரி முகச்  சாயம் பூசும் வேளை
என் தாயின் ஒரு நொடி முக பாவம் பேரழகு
தள்ளாத வயதில் என் அப்பத்தாவின் தொங்கிய
தோல்களின் சுருக்கங்கள் அழகோ அழகு!
நடை வரா நம் மழலைச் செல்வங்களின்
பிறழ் நடை கொள்ளை அழகு!
நீண்ட நேர தேடலுக்குப் பின் கவிஞனுக்குக்
கிடைக்கும் நம் தாய்மொழி வரிகள் கவின் அழகு!
அவ்வப்போது அப்பாக்கள் அடிக்கும் அலுவலகப் பொய்கள் அழகு!
துன்புறும் சமயம் துடித்துதவும் உள்ளங்கள் அழகு!
தோளோடு தோளாய் நம்மொடு நிற்கும் இல்லத்தரசிகளின் சேவைகள் அழகு!
நம்மை காக்க தன்னை வருத்தும் நம் எல்லை சாமிகளின் வீரம் மற அழகு!
முத்தாய்ப்பாய் என் குல சாமி பன்னிரு கையனின் திரு நாமமே அழகு!

# ஒளியைத் தேடு



ஏதும் அறியாமல் ஒதுங்கி இராதே..
அறிந்தும் அறியாமையில் மூழ்கி விடாதே..
முடியாது என்று முடங்கி விடாதே..
சூழ்ந்து இருப்பது சுயநல உலகம்..
சோம்பி திரிந்தால் இருளை மூட்டும்..
இருளில் மூழ்கி தத்தளிக்கும் போதும்
முயற்சியின் ஒளி உன்னை காக்கும்..
முயற்சி ஒளியைத் தேடு..
சூழ்நிலை இருட்டை விரட்ட..!



## படக்கவிதை

மிரட்சி காட்டும் மருட்சியும்,
எள்ளலோடு துள்ளலும்
எங்கு சென்று ஒளிந்தது.... அடடா...
தாங்களும் தையலவள்
தாக்குதலில் சிக்குண்டீர்களோ?

# பிசியும் பசியாற்றும்



திருமதி. **திலகவதி**
**முனைவர் பட்ட ஆய்வாளர்**
**மாநில தலைவர், ஆம்பல் தமிழ்ச்சங்கம்**

மே மாதம் பள்ளிக்கு விடுமுறை இந்த மாதத்தில் உருப்படியாக எதையாவது செய்ய வேண்டும் என்று எண்ணும்போதே ரதிக்கு பல வேலைகள் நினைவுக்கு வந்தன. ஒரு குறிப்பேட்டை எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றாக யோசித்து மே மாதத்திற்கான திட்டமிடலை எழுதிக் கொண்டிருந்த வேளையில் அழைப்பு மணி அழைத்தது. எழுந்து கதவை திறந்த ரதிக்கு மகிழ்ச்சி ஒட்டிக்கொண்டது. ஏகப்பட்ட சந்தோஷத்தை முகத்தில் சுமந்து வாசலில் அதே மகிழ்ச்சியுடன் இருந்த கீர்த்தியைக் கட்டிக்கொண்டாள் ரதி. ரதியும் கீர்த்தியும் ஒருவரை ஒருவர் அணைத்துவாறே வீட்டுக்குள் நுழைந்தனர்.

**ரதி:** இவ்வளவு சீக்கிரம் நீ வருவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லடி.

**கீர்த்தி:** ஆமாம் வராமல் எப்படி இருப்பது விடுகதையின் விடை தெரியாமல் பைத்தியம் பிடித்து விடும் போல் இருந்தது. அதனால்தான் உடனே வந்து விட்டேன். தூக்கமே போச்சு உன்னால். தெரியுமா?

**ரதி:** ஓ !அப்படியா! சங்கதி. பின்ன என்ன பாக்க வரல. விடையை தெரிந்து கொள்ளத்தான் வந்திருக்கிறாய்.

**கீர்த்தி:** இல்லடி. எப்பவுமே எனக்கு உன்னோட பேசறது ரொம்ப பிடிக்கும். உனக்கு தெரிஞ்சதுதானே. அதோட சேர்த்து நீ விடுகதையோட நிறுத்தியதனால் அதை தெரிஞ்சுக்கணும் என்கிற ஆவல் அதிகமாயிடுச்சு. அவ்வளவுதான்.

**ரதி:** சரி. தேநீர் எடுத்துக் கொண்டு வருகிறேன். சற்று உட்கார்.

**கீர்த்தி:** அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் உட்கார். பிறகு பார்க்கலாம்.

**ரதி:** உனக்கு வேண்டாம் என்றால் பரவாயில்லை எனக்கு வேண்டும்.

**கீர்த்தி:** சரி என்னைக்காவது மற்றவர்கள் சொல்வதை நீ கேட்டு இருக்கிறாயா? எப்பவுமே உன் பிடிவாதம் தான் சரி போட்டுட்டு வா. கூடவே சாப்பிட வேற ஏதாவது எடுத்துட்டு வா.

**ரதி:** இதோ உனக்கு பிடிச்ச வெங்காய பக்கோடா இருக்கு. எடுத்துட்டு வரேன்.

(சமையலறையில் இருவரும் தேநீர் தயாரித்துக் கொண்டே)

**கீர்த்தி:** அன்றைக்கு நேரமில்லை என்று பாதியோடு என்னை விட்டுவிட்டு சென்று விட்டாய் இப்போதாவது விடையை சொல் ரதி.

**ரதி:** அது அவசர அவசரமாக பேச வேண்டிய செய்தி இல்லை. பேச முடிகிற விடயமும் இல்லை. ஆறு அமர பேசுவோம் வா.

(வரவேற்பறையில் தேநீரோடு இருவரும்)

**ரதி:** நான் உனக்கு என்னென்ன துப்பு கொடுத்தேன் என்று சொல்ல முடியுமா?

**கீர்த்தி:** ஓ கண்டிப்பாக.



விடை கவிதை.

அதில் படம் இருக்கும். கணக்கு இருக்கும். மரபு பா வகையில் இருக்கும். அளவீடு கொண்டு எழுதப்படும். நேரடியாகவும் மறைமுகமாகவும் பல பொருள் தரும். வடிவங்களில் பல கட்டுப்பாடுகள் இருக்கும்.

**ரதி:** அருமை அருமை. அத்தனையும் நினைவில் வைத்திருக்கிறாய். சிறப்பு. இதோடு இன்னொன்றையும் சேர்த்துக் கொள். படத்தில் இல்லாமலும் இக்கவிதை அமையலாம்.

**கீர்த்தி:** விளையாடுகிறாயா நீ? படக்கவிதை என்றாய். பின் படம் பார்த்து எழுதும் கவிதை அல்ல. படத்தில் எழுதும் கவிதை என்றாய். இப்போது படமே இல்லாமல் கவிதை எழுதலாம் என்கிறாய்?

**ரதி:** படம் இல்லாமல் சொற்கள் மட்டுமல்ல எழுத்துக்களிலும் கூட மாய வித்தை செய்யும் கவிதை வகை இது.

**கீர்த்தி:** புதிரின் கடினத்தன்மை கூடிக்கொண்டே இருக்கிறது. இறைவா! இவளிடமிருந்து காப்பாற்று. ஏதாவது ஒன்றை இவள் மூளைக்குள் வைத்துக் கொண்டு என் மூளையை கசக்கி கொண்டிருக்கிறாள்.

**ரதி:** அச்சோ!. பாவம். சரி கஷ்டப்படாத. விடையை சொல்கிறேன். தமிழில் நாற்கவி என்ற சொல்லை கேள்விப்பட்டிருக்கிறாயா?

**கீர்த்தி:** நாற்கவியா? நற்கவியா?

**ரதி:** ஏண்டி.. நாற்கவி தான்.

**கீர்த்தி:** கவி என்றால் குரங்கு என்று பொருள். நற்கவி என்றால் நல்ல குரங்கு. நாற்கவி என்றால் நான்கு குரங்குகள். சரியா? என்று பெருமையோடு அவளை பார்த்துக் கொண்டே சிரித்தாள்.

**ரதி:** கவி என்றதும் எல்லோருக்கும் தோன்றுவது கவிஞர் என்ற பொருள்தான். அதனை எடுத்துக் கொள்ளாமல் குரங்கு என்று சிறப்பு பொருளை கூறியதற்கு உனக்கு பாராட்டுக்கள். என் செல்லமே !ஆனால் அவ்வளவு அழகாக நீ கூறிய குரங்கு பொருள் இங்கு இல்லை. சாதாரண கவிஞர் என்ற பொருள்தான்.

**கீர்த்தி:** எல்லாவற்றிற்கும் நீதான் காரணம். கவிமுகில், கவிநேயர், கவி முரசு என்று ஏதேதோ விருதுகள் வாங்கி வைத்திருக்கிறாய். கவி என்ற வார்த்தையும் உன் முகமும் ஒருங்கே நினைவில் இருந்ததால் கவிக்கு குரங்கு என்னும் பொருள் தான் ஞாபகம் வருகிறது. கவிஞர் ஞாபகம் வரவில்லை. நான் என்ன செய்ய?

(நக்கலாக சிரித்தபடியே)

**ரதி:** கீர்த்தியின் காதை பிடித்து திருகியவாறே

ஓ !..அப்படியா! சங்கதி .சரி என் முகம் குரங்காகவே இருக்கட்டும். குரங்குக்கு உன் கேள்விக்கு பதில் சொல்லும் அளவிற்கு அறிவு கிடையாது. நீ உண்மையான கவிஞர்களிடம் கேட்டு தெரிந்து கொள்.

**கீர்த்தி:** என் செல்லம் இல்ல...... என் தங்கம் இல்ல.... என் பட்டு.... கோச்சுக்காதடா. சும்மா விளையாட்டுக்கு சொன்னேன். தயவு செஞ்சு சொல்லு. என் மண்டையே வெடிச்சிடும்.

**ரதி:** அப்போ விளையாட்டெல்லாம் விட்டுட்டு கொஞ்சம் கவனமாக கேள்.

**கீர்த்தி:** சரிங்க குருவே. உத்தரவு

**ரதி:** மனதிற்குள் சிரித்துக் கொண்டே. நாற்கவி என்பது நான்கு கவிகளை குறிக்கும். பாடப்படும் முறைமையால் நான்கு வகைப்படும் கவிதைகள்.

**கீர்த்தி:** ஓ.. அது என்னென்ன?

**ரதி:** அவை ஆசுகவி ,மதுரகவி, சித்திரகவி மற்றும் வித்தாரகவி.

**கீர்த்தி:** ஏய்... கண்டுபிடிச்சுட்டேன் .இதில் சித்திரக்கவி தான் நீ சொன்ன பட கவிதை சரியா?. (எப்புடி....)

**ரதி:** (கன்னத்தைக் கிள்ளி மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டே) சரியாகச் சொன்னாயடி. சித்திரக் கவியே தான்.

**கீர்த்தி:** நாங்க எல்லாம் யாரு? கோடு போட்டா ரோடு போடுற ஆளு தெரியுமா? நீ ஒரு சின்ன துப்பு கொடுத்தாய். நான் கண்டுபிடிச்சிட்டேன் பார்த்தியா...

**ரதி:** ரதி விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே ஆமாண்டி ஒரே துப்பில் கண்டுபிடித்து விட்டாய் .உன் அறிவே அறிவு என்று திருஷ்டி கழித்தாள்.

**கீர்த்தி:** நீ சொன்ன எல்லாமே இந்த சித்திரகவிகள் அடக்கமாடி...

**ரதி:** ஆமாம் கீர்த்தி

**கீர்த்தி:** இதன் பெயர் சித்திரகவி. சித்திரம் என்றால் ஓவியம். ஆனால் நீ படமே இல்லாமலும் இதை எழுதலாம் என்றாயே !எப்படி இதில் பொருள் வரும்.

**ரதி:** சரியான கேள்வி கேட்டிருக்கிறாய். இந்த கேள்விக்கு ஒரு பாராட்டு. விடை தருகிறேன்.

**கீர்த்தி:** சித்திர கவி தவிர்த்து மீதமுள்ள கவிதைகளைப் பற்றியும் கொஞ்சம் சொல்லேன்டி.

**ரதி:** முதலில் நாற்கவி பற்றியும் பிறகு சித்திரக் கவி பற்றியும் சொல்கிறேன்.அதாவது ஆசுகவி என்பது ......

என்று ரதி ஆரம்பிக்கையில் ஆ....என்ற அலறலோடு கீர்த்தி ரதியைக் கட்டிக் கொண்டாள்.ரதியும் பயத்துடனே அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டாள்.

இவர்களது சுவாரஸ்யமான பேச்சை இடையில் நிறுத்தியது எது? அங்கு நடந்தது என்ன? ஏன் கீர்த்தி அலறினாள்?.... விடைகளைத் தெரிந்து கொள்ள அடுத்த இதழ் வரை காத்திருக்கவும்.....



**மே மாதம் என்பது, கிரிகோரி நாள்காட்டியின் ஐந்தாவது மாதமாகும். கிரேக்கக் கடவுளான 'மேயா' என்ற பெயரின் சுருக்கமே 'மே' மாதத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பெயரை ரோமப் பேரரசர் ரோமுலஸ் சூட்டினார்.**

**ரோமானியர்கள் மே முதல் நாளை 'காலண்டே மேயே' எனக் கொண்டாடுகிறார்கள். இம்மாதம் 31 நாள்களைப் பெற்றுள்ளது. உலகமெங்கும் உழைப்பாளர் தினம் மே 1ம் நாள் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.**



# உண்மையில் வெற்றி என்றால் என்ன?



கேரளா என்பதும் நமக்கு நியாபகம் வருவது சிப்ஸ் மற்றும் சேட்டா என்ற வார்த்தை மற்றும் பெண்கள். அந்த பெண்கள் பற்றி தான் இந்த பதிவு.

சுமார் நூறு வருடங்களுக்கு முன் கேரளாவில் ஈழவா (Ezhava) என்னும் சாதியின் மக்கள் மேலாடை அணிவது என்பது ஒரு போராட்டமாகவே இருந்தது. கீழ் சாதி (lower caste) என படும் ஈழவா மக்கள் மேலாடை அணிவது தவறு என்பதை உயர் சாதி (upper caste) மக்கள் கருதினர். இதனாலேயே அவர்களை மேலாடை அணியவிடவில்லை உயர் சாதி கூட்டத்தினர்.

இவர்கள் ஏதாவது திருவிழாவிலோ அல்லது பண்டிகைபோதோ மேலாடை உடுத்தினால் அதற்கு தரும் தண்டனைகள் வாயால் சொல்ல இயலாது. அது போல மிகவும் மோசமாக நடத்தப்பட்டனர் இவர்கள். இதை எதிர்த்து போராடிய பெண்களுள் முக்கியமானவர் லட்சுமிக்குட்டி.

1952 ஆம் ஆண்டில், திரிசூரில் உள்ள மணிமலார் கவுவில் வரலாற்று சிறப்புமிக்க **’வேலூர் மரு மரக்கல்’** போராட்டத்திற்கு லக்ஷ்மிகுட்டி தலைமை தாங்கினார்.


உயர் சாதி நில உரிமையாளர்கள், தாழ்த்தப்பட்ட பெண்களை அவர்களின் மார்பை



மறைக்காமல் கோயில் திருவிழாவில் பங்கேற்க கட்டாயப்படுத்தினர்.

லட்சுமிகுட்டி அம்மா உட்பட சில பெண்கள் மார்பை மூடி தலப்போலியை கோவிலுக்கு சென்றனர். இது மிக பெரிய வரலாற்று சம்பவமாகியது. லட்சுமிக்குட்டி அம்மா பின்பு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று கேரளா மாநில பெண்கள் பல துறைகளில் சாதித்து வருகின்றனர். உண்மையான வெற்றி என்பது யாதெனில் ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம் ஒரு இனத்தின் முன்னேற்றம்.!

## அன்னையர் தின வாழ்த்துக்கள்...



# அன்னையர் தினம்





முனைவர். **ரவி கோவிந்தராஜ்**
**நிறுவனர், ஆம்பல் தமிழ்ச்சங்கம்**

நீங்கள் உங்கள் தாயை பார்க்கும் பொழுது, உலகிலேயே உள்ள தூய்மையான நேசத்தையும் காதலையும் பார்க்கிறீர்கள் எனச் சார்லி பென்னடோ கூறுவார்.

அவர் கூறிய வார்த்தைகளில் அவ்வளவு உண்மை அடங்கி இருக்கிறது. இவ்வுலகில் நாம் எந்த ஒரு காலக் கட்டத்திலும் சரி எத்தனை மனிதர்களைச் சந்தித்து இருந்தாலும் சரி நம் தாய் அளவிற்கு நம்மை யாரும் நேசித்திருக்க முடியாது.

அஃது எவ்வாறான நேசம் என்றால், நம்மிடம் திரும்பி எந்த ஒரு கைமாறையும் எதிர்பார்க்காமல் வாழ்நாள் வரை பொழிந்து கொண்டிருக்கும் நேசம் ஆகும்.

நாம் யார் யாரிடமோ நாம் அவர்களை நேசிக்கிறோம் எனக் கூறுகிறோம். ஆனால், ஒரு முறையாவது நம் தாயிடம் அவளை நேசிப்பதாகக் கூறி இருக்கிறோமா.

அந்த வார்த்தைகளைத் தவிர அவளுக்கு மகிழ்ச்சி அளிப்பது வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

எந்த ஒரு தாயிடம் கேட்டாலும் அவள் கூறுவாள், குழந்தைகளைப் பெற்றெடுப்பதை விடக் கடினமானது அவர்களை நல்ல மனிதர்களாக வளர்ப்பது தான் என்று.

இதற்கு ஒரு சினிமாப் பாடலே உதாரணம் காட்டலாம்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே
அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே"

வளர்ப்பு என்பதில் கூடத் தந்தையின் வளர்ப்பை அவர்கள் குறிப்பிடவில்லை. தாயின் வளர்ப்பையே குறிக்கிறார்கள்.

ஏனென்றால் பிறப்பின் பின் அக்குழந்தைக்கு விவரம் தெரியும் வரை தாயிடமே இருக்கின்றது. தாயைப் பார்த்துதான் உலகத்தைக் கற்றுக் கொள்கிறது. தாயைப் போலத் தான் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றது.

ஆனால் குழந்தை எவ்வாறான மனிதன் ஆகப் போகின்றான் என்பதையே தாய் தான் தீர்மானிக்க வேண்டும்.

புரிதலும் தாயிடம் தான் அதிகமாக நடைபெறுகின்றது.

தன் மகன் அல்லது மகள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தாயால் புரிந்து கொள்ள முடியும். அதேபோல நமக்குப் பிடித்தவை பிடிக்காதவை உடம்பிற்குத் தீங்கு விளைவிப்பவை என அனைத்தையும் தாய் அறிவாள்.

நம்மைப் பாதுகாக்க வேண்டும் என்றே தாய் முதலில் நினைப்பாள்.

நாம் மழையில் சொட்டச் சொட்ட நனைந்து வீடு திரும்பும்பொழுது, வாசலிலேயே துண்டுடன் நின்று,

"அப்பவே குடை எடுத்துட்டுப் போகச் சொன்னேன், கேட்டியா" எனத் திட்டுவதும்

14-5-2002 - ஏழு கிரகங்கள் ஒரே நேர்கோட்டில் வந்தன.

தாய்தான்.

நமக்கு அடிபடும் பொழுது நம்மைவிட வலியால் அதிகம் துடிக்கும் ஒரே நபரும் நம் தாயாகத் தான் இருக்க முடியும்.

ஒரு மகனுக்கும் சரி ஒரு மகளுக்கும் சரி அவர்கள் தாய் மேல் வைத்திருக்கும் அன்பு வேறுபடுகிறது.

மகனோ சிறுவயதில் இருந்தே தாயை நேசிக்கின்றான். அவள் அருகிலேயே நாட்களைச் செலவழிக்கின்றான்.

''சாப்பாடு வேணும், என் யூனிபார்மை துவச்சாச்சா, என் பொம்மையைத் தேடித்தா, கால்ல இடிச்சுகிட்டேன், இந்தாம்மா மார்க் சீட் சைன் போட்டு விடு'' என அனைத்தையுமே அவன் தாயிடம் தான் சொல்கிறான். கேட்கிறான்.

தந்தையிடம் அவன் கேட்டது ஒன்று தான் ''அப்பா அம்மா எங்கே?''

இவ்வாறாகத் தாயின் செல்லப்பிள்ளையாகவே அவன் வளர்கிறான்.

ஆனால், மகளோ தன் சிறு வயதிலெல்லாம் தந்தை உடனே களிக்கிறாள். அவளுக்குத் தந்தைதான் அவளது சூப்பர் ஹீரோ. வெளியே கூட்டிக் கொண்டு போகச் சொல்வது, எதாவது வாங்கித் தர சொல்வது என எல்லாமே தந்தையிடம் தான்.

அவ்வயதில் அவள் தாயை கண்டு கொள்வதே இல்லை. ''ஐஸ்கிரீம் வேண்டாம்'' என்றால் தாய் கெட்டவள்.

அடம் பிடிப்பதைப் பொறுக்காமல் அதை வாங்கித் தரும் தந்தையோ நல்லவர். ஆனால் யார் உண்மையிலேயே நன்மை செய்கிறார்கள் என அவருக்கு அப்பொழுது தெரிவதில்லை.

ஆனால் வளர்ந்த பிறகு அனைத்துமே மாறி விடுகின்றது.

அதுவும் மகள்களுக்குத் தாங்களும் தாய் ஆகும் நிலையில்தான் அவர்களின் அம்மாக்களின் மகிமை தெரிகின்றது.

அதன் பிறகு அக்கடவுளே நினைத்தாலும் அம் மகளையும் தாயையும் பிரிக்க இயலாது.

தன் மகளோ மகனோ செய்யும் ஒவ்வொன்றையும் பார்க்கும் பொழுதுதான், ''நாமும் நம் அம்மாவை இப்படித்தானே திட்டி இருப்போம் கஷ்டப்படுத்தி இருப்போம். ஆனால் அவள் எங்கள் மீது ஒருபோதும் கோபம் கொண்டதில்லையே'' என உணர்கிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்கள் செய்தது சரி என உணரும் வேலையில், அவர்களைத் தவறாக நினைக்கும் பிள்ளைகள் அவர்களுக்கு வந்து விடுகின்றார்கள்.

அதேபோல, மகனோ தன் மனைவி வரும் வரை தான் தாயின் அருகில் இருக்கிறான். அதன்பிறகு அவன் தாயின் கருத்துக்கள் இரண்டாம் நிலைக்குச் சென்று விடுகின்றன. மனைவி தான் முதல் என அவன் மாறிப் போகின்றான்.

ஆதலால் தான் ஒரு வாக்கியம் நினைவுக்கு வருகிறது.

மகன் தனக்குத் திருமணம் நடைபெறும் வரை தான் தாய்க்கு மகனாக இருக்கிறான்.

ஆனால், ஒரு மகளோ வாழ்நாள் முழுவதும் தாய்க்கு மகளாகவே இருக்கிறாள்.

வாழ்வில் எந்த ஒரு சூழலிலும் நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியதெல்லாம் ஒன்றுதான். அன்று நம் பெற்றோர்கள் இல்லையென்றால் இன்று நாம் இல்லை. அவர்கள் தான் நமக்கு உயிர் அளித்த தெய்வங்கள். அவர்களை நாம் என்றுமே மறக்கவோ உதாசினப் படுத்திவிடவோ கூடாது.

அதிலும் தாய் ஆனவள் ஒருபடி மேல் தான். தன் உடலில் பாதி மட்டும் அளிக்காமல், அவளது உயிர் அன்பு வாழும் காலம் அனைத்தையும் நமக்காக அளிக்கும் அவளை நாம் தெய்வமாகவே எண்ண வேண்டும்.

என்றுமே தாய் ஆனவள் நம் உடலில் ஓர் அங்கம்தான். நமக்குள்ளும் ஒருவராகவே அவளை நினைக்க வேண்டும். தினமும் நினைக்க வேண்டும் என்றாலும், அன்னையர் தினம் அன்றாவது அவளிடம் நாம் இதைக் கூறுவோம்.

''இவ்வுலகை பொறுத்தவரை நீ எனக்குத் தாய் ஆனால் என்னைப் பொறுத்தவரை நீ தான் என் உலகமே"

ஒவ்வொரு அன்னைமார்களின் கைகளில் தான் ஒரு நாட்டின் எதிர்க்காலத்தைச் சிருஷ்டித்துக் கட்டமைக்கும் மாணவத் தூண்கள் எல்லாம் செதுக்கப்படுகிறது.

அன்னையின் வயிற்றில் கருவானதில்

இருந்து இந்த உலகத்தையும் உலக நடப்புகளையும் கவனிக்கத் தொடங்கும் குழந்தை அவளது வளர்ப்பிலும் அவளது பண்பைப் போன்ற வார்ப்பிமும் தான் இந்தச் சம்மூகத்தில் ஒருவனாகவும், மக்களின் பிரநிதியாகவும், மக்களால் மக்களுக்காக மக்களே ஆளும் மாபெரும் தலைவனாகவும் உருவெடுக்கிறான்.

அன்னையின் கைகளில் ஒரு களிமண் இருந்தாலும் அது விலையேறப்பட்ட கலைநயப் பொருளே ஆகும் எனில் ஒரு குழந்தையை அவள் எப்படி வனைப்பாள் என்பதற்கு நாமெல்லாம் சான்று.

இந்த உலகமே அன்னையின் காலடியில் தவம் கிடந்தாலும் அவளது கண்ணும் கருத்துமான கொள்கைகள் எல்லாம் மனித சமுதாயத்திற்குத் தேவையான பொறுப்புள்ள ஆளுமைகளாக தனது குழந்தைகளை உருவாக்க வேண்டு என்றே சிந்தனை செய்வாள்.



அதனால், பெண்களின் தனித்தன்மை இனிமேலும் போற்றிப் பாதுக்காக்கபட வேண்டும். அது மானிடத்தை உயர்த்தும் திறவுகோல் ஆகும்.

எத்தனை பிரச்சனைகள் வேண்டுமானாலும் எதிர்கொண்டு வரட்டும், தனது பிரசவ வலிகளையே தன்னம்பிக்கையும் அதிக ஆற்றலுடன் தாங்கியவளுக்கு அதெல்லாம் ஒரு சொற்பம் தான். அந்தத் தாயிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள எத்தனை உண்டு தெரியுமா ?

"அலுப்பில்லாமல் நிமிடம் தோறும் உழை! ஆகாசத்தை போல் நாளும் அறிவை விரிவாக்கிடு... சுமைகளைக் கண்டு சுருண்டு படுக்கையில் படுத்துக்கொள்ளாதே ... சுமை வந்தால் தான் நீ அதை வெல்கிறாயா இல்லை அது உன்னை வெல்கிறாயா என்பதற்கான ஒரு முடிவு தெரியும். காலம் முழுவதும் உழைத்துக் கொண்டே இருந்தாலும் கூட கொண்ட கொள்கைகளில் இருந்தும் தனக்கு உண்டான கடமைகளில் இருந்தும் அணுவளவும் விலகிச் செல்லக்கூடாது. சூரியனே எதிர்த்து படைதிரட்டி நம்மேல் போர்தொடுக்க வந்தாலும் அதற்கு அதிர்ந்து போய் நிற்காமல் நம்மை நிதானப் புத்தியுன் துணிந்து நின்று அதை எதிர்கொள்ளும் தைரியத்தை நெஞ்சில் விதைத்து உனது வல்லமையால் அதை வென்று முடி! துக்கம் என்பது இலைகள் உதிர்வு போல் அதை நீ விரும்பாவிட்டாலும் உன் மனக்கிளையில் மீண்டு முளைத்து உன்னைப் பற்றித் தொங்கிகொண்டு உன் உறுதியைக் கண்டு கடைசியில் அது தானாகவே உதிர்ந்து விடும். வையத்தில் வாழ்வது ஒருவாழ்க்கை அது உண்மையும் உத்தமுமாய் வாழ்ந்து இந்த வாழ்க்கையைப் பயனுள்ளதாக நிறைவு செய் ! ஊக்கத்தின் சக்தி என்பது உள்ளமே அதை நாம் மகிழ்ச்சி என்றால் மகிழ்ச்சியும், துக்கம் என்றால் துக்கமும் நம்மை வந்து அடையும்! ஆனால் ஒருபோதும் பிரச்சனைகள் எனும் பூதத்தைக் கண்டு பயப்படாதே.. எந்தக் காலத்திலும் எதையும் வெல்லும் மனோதிடம் உனக்கு உண்டு'' என்று அவளது அனுபவ மொழிகள் நமக்கு அனுதினமும் எச்சரித்து அசரீரீபோல் மனதில் சமிக்ஞை கொடுத்து மூளைக்கு ஒரு ஆலோசனை சொல்லிக்கொண்டே உள்ளது.

அன்னையில் பாதம் தொட்டு அவளது வார்த்தைகளை உள்வாங்கி அவள் சென்ற பாதையிலே நாமும் செல்வோம். அன்னையை வாழ்த்தி வணங்கியபடி ..

ஏனென்றால் அவள் ஓட்டுமொத்த அறிவுகத்தின் ஒவ்வொரு மனிதனின் முதல் அனுபவப் பேராசிரியை அன்னை என்பதனால்தான்.

அன்னையர் தினம்

அன்னையர் தினம் பழங்காலத்தில் தாய்க் கடவுளுக்கு வசந்த விழாவாகக் கொண்டாட பெற்றதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

16ஆம் நூற்றாண்டில் கிரீஸ் நாட்டில் தான் MOTHERING SUNDAY என்ற நாள் முதன் முதலில் கொண்டாடப்பட்டது.

அமெரிக்காவில் வாழ்ந்த மரியா ஜார்விஸ் என்ற பெண்மணியின் தாயன்பை அடியொட்டியே அன்னையர் தினம் இன்று வரை கொண்டாடப்பட்டு வருகின்றது.

**முக்கிய பிறந்த தினங்கள்**

5-5-1818 - கார்ல் மார்க்ஸ், 5-5-1916 - ஜெயில்சிங் (முன்னாள் குடியரசுத் தலைவர்)



# தந்தையர் தினம்

முனைவர். **ரவி கோவிந்தராஜ்**
**நிறுவனர், ஆம்பல் தமிழ்ச்சங்கம்**

"இந்தா அம்மா.. என் முதல் மாத சம்பளம்.. 30 ஆயிரம் ரூபாய்.. அப்பா எப்பவாச்சும் இப்படி முப்பது ஆயிரம் சம்பாதித்து இருக்கிறாரா.. எனக்கு இன்னும் கூட பதவியும் சம்பளமும் கூடிக்கிட்டே போகும்..!"

இதுவரை மகன் இப்படிப் பேசி அந்த தாய் கேட்டதே இல்லை. வீட்டில் அதிகம் பேசவே மாட்டான் .

அப்பாவிடம் சுத்தமாக பேசுவதே இல்லை. அப்படிப்பட்டவன் வாயில் இருந்தா இப்படிப்பட்ட வார்த்தைகள்...? மனம் துணுக்குற்றாள் அம்மா .

“என்னடா.. வார்த்தை எல்லாம் தடிப்பா வருது..? அதுவும் அப்பாவை பற்றி ரொம்ப ஏளனமாக பேசுற..!"

"அவர் மட்டும் என்னை ஏளனமாக நடத்தலையா.. காலேஜ் போன புதுசுல ஒரு போன் வாங்கி தாங்கன்னு கேட்டதற்கு இழுத்தடிச்சு ஒரு வருஷம் கழிச்சுத் தானே வாங்கி தந்தாரு..!

"அப்பாவோட வருமானம் அவ்வளவுதான்டா இருந்துச்சு..!

"அதெல்லாம் இல்ல.. போன் வாங்கி தந்தா பிள்ளை படிப்பு கெட்டுடுமோன்னு நினைச்சிருப்பார்..!"

"அது சரிதானே.. நீயும் மூன்றாவது செமஸ்டர் மார்க் குறைவாகத்தானே எடுத்தே..!

"மார்க் குறைவாக எடுத்தால் பொறுமையா சொல்லலாம் இல்ல..? எதுக்கு போனை பிடுங்கி உன் கையிலே கொடுத்து, "பத்திரமா வச்சிரு.. அவன் காலேஜ் முடிச்ச அப்புறம் கொடுத்தா போதும்.. என்று சொன்னாராம்..?"

"அப்பவாச்சும் நீ படிப்பில கவனம் செலுத்துவாய் என்றுதானேடா.. மகனே..!

" நான் தான் இனிமே ஒழுங்கா படிக்கிறேன் என்று சொன்னேன்ல.. அப்புறம் எதுக்கு காலேஜ் வந்து என் கிளாஸ் டீச்சர் கிட்ட விசாரிச்சாரு.. எனக்கு எவ்வளவு கேவலமா இருந்துச்சு தெரியுமா..?"

"எப்பவும் நான் உன்னை கவனிச்சுக்கிட்டே இருக்கேன் என்ற பயத்தை உனக்கு ஏற்படுத்துவதற்காகத் தான் அப்பப்போ காலேஜ் வந்து போறேன்னு அவரே சொல்லி இருக்காரு..!"

"அதெல்லாம் கூட பரவாயில்லம்மா.. மூணாவது செமஸ்டெர்ல பெயிலா கூட ஆகல.. பர்சன்டேஜ் குறைஞ்சிடுச்சுன்னு நீ, தங்கச்சி, உன் அண்ணன் பசங்க எல்லாரும் வீட்ல இருக்கும்போதே சேர்ல உட்கார்ந்து இருந்த என்னை இழுத்துப் போட்டு நங்குன்னு மிதிச்சாரு.. எனக்கு எவ்வளவு அவமானமாக இருந்திருக்கும்..? அன்னைக்கு எடுத்தேன் சபதம்..இவர் முன்னாலே ஒரு கவுரவமான மனுசனா வாழ்ந்து காட்டணும்னு. காலேஜ்ல நடந்த கேம்பஸ் இண்டர்வியூவில் பாஸ்

பண்ணிய இரண்டு பேரில் நானும் ஒருத்தன். இப்பொழுது வேலைக்குச் சேர்ந்து இது முதல் மாசம் சம்பளம் வாங்கிட்டு வந்துட்டேன்.. இந்த பணத்தை கொண்டு போய் அவர்கிட்ட காட்டி இனிமேலாவது யாரையும் ஏளனமாக நினைக்காதீங்க.. என்று சொல்லு..போ..!"

"ஏம்பா..இப்போ நீ பேசும்போது இடையில் ஏதோ சொன்னியே சபதம் எடுத்தேன் என்று.. அந்த வைராக்கியத்தை உனக்குள்ள ஏற்படுத்தணும்னு தான்டா அவர் தன்னுடைய பாசத்தை எல்லாம் மறைத்து கண்டிப்பாக நடந்து கொண்டார்..! அம்மாக்கள் கூட பிள்ளைகள் நம்மை நாளைக்குக் காப்பாத்தணும் என்ற எதிர்பார்ப்போடு தான்டா இருப்பாங்க.. அப்பாக்கள் அப்படி இல்லையடா..மகனே.." நம்மை விட நம்ம பிள்ளை நல்லா இருந்தா போதும்னு" தான் நினைப்பாங்க..! அம்மா உன் உடம்பை தான் வளர்ப்பா.. அப்பா தான் உன் வாழ்க்கையைப் பற்றி நினைப்பார்..!"

"நீ சரியான ஜால்ரா.. எப்ப பாரு அவருக்கு சப்போரட்டாத்தான் வருவ..!"

"இந்த வார்த்தையை ஒரு 15 வருடம் கழித்து சொல்கிறாயா என்று பார்ப்போம்..!"

"ஏன்.. சொல்வேனே..! உன் வீட்டுக்காரரை நீதான் மெச்சுக்கணும்..!"

"உன்னால சொல்ல முடியாது.. ஏன்னா அப்போ நீயும் சில பிள்ளைகளுக்கு அப்பா ஆகி இருப்பே..!பிள்ளைகள் குறித்தான அப்பாக்களின் எண்ணங்கள் உனக்கு புரிந்து போயிருக்கும்..!"

அப்போது அப்பா வீட்டிற்குள் நுழைகிறார்.

" பாரு அப்பாவே வந்துட்டாரு ..

அந்தப் பணத்தை அவர்கிட்ட நீயே கொடு என்ன சொல்கிறார் என்று பாரு..!"

"என்ன சொல்லப் போறாரு.. "மாசாமாசம் இதே மாதிரி நிறைய சம்பாதிச்சு பைசா குறையாமல் கொண்டு வந்து கொடுக்கணும்னு.." கட்டளை போடப் போறாரு ..!

அப்பாஅருகில் வந்து இருந்தார்..!

" அப்பா..! "

"இவனா அழைக்கிறான் என்னைய..?" அதிசயமாக ஏறிட்டுப் பார்த்தார் மகனை. அவர் கண்களில் சிறு மின்னல் கீற்று.. முகத்தில் சில வினாடி பிரகாசம்..!

"இந்தாங்க முதல் மாத சம்பளம்..!"

"எவ்வளவு..?"

"முப்பதாயிரம்.. ட்ரெய்னிங் பீரியட் இரண்டு வருஷம் முடிஞ்சா லட்சத்துக்கு மேலே வரும்..!"

"நல்லது.. அதை நீயே வச்சுக்கோ ..!"

"ஏன் அப்படி சொல்றீங்க..?"

"ஆமா தம்பி.. நான் கூட சின்னச் சின்ன அனாவசிய செலவு செய்வேன்.. நீ ரொம்ப சிக்கனமாக இருக்கிறத கவனிச்சிருக்கேன்..! அப்பா உங்களுக்கு எந்த சொத்தும் சேர்த்து வைக்கல.. படிக்க வச்சிட்டேன்.. அதுதான் நான் உனக்கு தர சொத்து. உன் பணத்தை நீயே வச்சுக்கிட்டு நீ என்னென்ன ஆசைப்பட்டாயோ அதற்கு செலவு பண்ணிக்கோ.. என் உடம்புல தெம்பு இருக்கிற வரைக்கும் அம்மாவுக்கும் தங்கச்சிக்கும் கஞ்சி ஊத்துவேன்.. அதுக்கப்புறம் நீ அவங்களை பொறுப்பா பாத்துக்கப்பா..!"

"நான் பார்த்துப்பேன்பா.. நீங்க கண்கலங்காதிங்கப்பா..!"

"நான் அதற்கு கண் கலங்கவில்லை.. ரொம்ப வருஷங்களுக்கு அப்புறம் நீ என்னை "அப்பா" ன்னு கூப்பிட்டுப் பேசினல்ல..!"

மகன் கண்கள் கலங்க அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான்..!

"அப்பா.. இத்தனை நாளா உங்களை தப்பாப் புரிஞ்சிட்டேம்பா..!

மகன் பற்றி இருந்த அப்பாவின் கைகளில் வயோதிகத்தின் சிறு நடுக்கம்..

மகனின் கைகளிலோ குற்றம் இழைத்தப் பெரு நடுக்கம் ...!

அப்பாவின் விழிகளில் கசிந்த கண்ணீர் ஆனந்தக் கரையாடிக்கொண்டிருந்தது...

மகனின் கண்களில் வழிந்த கண்ணீர் குற்ற உணர்வைக் கரைத்தோடிக் கொண்டிருந்தது...! சம்பாதித்து முடித்த அப்பாக்களும் வேலையிலிருந்து ஓய்வு பெறப் போகும் அப்பாக்களும் இதனைக் கண்ணீரோடு (என்னைப்போலவே) படிப்பார்கள் என்று எண்ணுகின்றேன்.



# கத்தார் ஆம்பல் தமிழ்ச்சங்கம்

இந்த படம் அரபு நாடுகள்ல, பக்கத்துல கட்டிட வேல செஞ்சிட்டு இருந்த சில ஊழியர்கள் மதிய உணவுக்காக கார் பார்க்கிங் இடத்தல கீழே அமர்ந்து சாப்பிடும் போது எடுத்தது.

அங்கிருந்தவங்க, முக்கால்வாசி பேர் இந்தியர்கள்,குறிப்பாக கேரளா மற்றும் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள்.

யார் இவர்கள்? ஏன் இப்படி கஷ்டப்பட்டு வேலைபாக்கணும்? சொந்த நாட்டுலயே வேல பாக்கலாமே?


அப்பாக்கள் :

எல்லா அப்பாக்களுக்குமே பெத்த புள்ளைங்களோட சந்தோசமா குடும்பமா இருக்கணும்னு தான் ஆசை.இருந்தாலும் பாஷை தெரியாத ஏதோ ஒரு நாட்டுல, ஒரு நாளைக்கு 13 மணி நேரம் அடிக்கிற வெயிலையும்,கொற்ற மழைலையும்,கடும் குளிர்லயும் வேல பாத்துட்டு, பத்து பேர் தங்குற ஒரு புறாக்கூடு அறையில தங்கிகிட்டு ஒழுங்கான சாப்பாட்ட சாப்பிடாம எதுக்கு அவ்வளவு கஷ்டப்படணும் ?

அங்க கிடைக்குற பணத்துக்காகவா ?? கண்டிப்பா இல்லை.புள்ளைங்களுக்காக !!

புள்ளைங்க நல்லா இருக்கனும்,நல்லா படிக்கணும், நல்ல இடத்துல வேலைக்கு போகணும் ,பொண்ணுக்கு கல்யாணம் பண்ணனும். அதுக்காக அந்த அப்பா எவ்வளவு கஷ்டத்த வேணும்னாலும் சந்தோஷமா தாங்கிப்பார்.

வாலிப வயதில் குடும்ப பாரம் :




இது ஒரு புறமிருக்க, வாலிப வயதிலேயே குடும்ப பாரத்தை சுமக்கும் இளைஞர்கள்/ வீட்டின் தலைமகன்கள்.

வீட்டுல அப்பாவுக்கு முடியல, வேல செய்ய முடியாது, கூட பொறந்த தம்பி, தங்கச்சிய படிக்க வைக்கணும், நல்ல இடத்துல கல்யாணம் பண்ணி வைக்கணும், கடன அடைக்கணும்னு அவன் வயசு பசங்க அனுபவிக்கிறது எதுவும் அனுபவிக்காம, குடும்பத்துக்காக வேற நாட்டுக்கு ஓடி ஓடி ஓடாய்த்தேந்து தன்னுடைய கடமைகள் அனைத்தையும் செஞ்சு முடிச்சு தனக்கான வாழக்கை பற்றி யோசிக்கிறப்போ வயசு 35 ஆகியிருக்கும்.

இப்படி வெளிநாட்டுல வேல பாக்குற ஒவ்வொரு ஆணின் வாழ்க்கைக்கு பின்னாலும் வார்த்தைகளால் சொல்ல முடியாத வலி இருக்கு,தியாகம் இருக்கு.

முக்கியமா இப்போ இருக்குற கொரோனா சூழ்நிலையில் சொந்த ஊருக்கு போக முடியாம, குடும்பத்துக்கு போன்ல தைரியம் சொன்னாலும் ஒவ்வொரு நாளையும் ஒரு யுகமாக கடக்கும் வலி இருக்கே, வார்த்தைகளில் விவரிக்க முடியாது.

Men's Life is not easy as many think. இனிய தந்தையர் தின நல்வாழ்த்துக்கள்.



# நில் கவனி செல்





முனைவர். ரவி கோவிந்தராஜ்
நிறுவனர், ஆம்பல் தமிழ்ச்சங்கம்

வணக்கம்.

உலகில் பிறந்த அனைவருமே வாழ்க்கையில் உயரவேண்டும், முன்னேற வேண்டும், வளர வேண்டும் என்று விரும்புகின்றனர்.

நீங்கள் முன்னேற, உயர, வளர விரும்பினால் உயர்ந்த குறிக்கோள் ஒன்றை வரையறுத்துக் கொண்டு, உழைக்கத் தயாராகி விடவேண்டும்.

ஆசை காரணமாக உயர்ந்த குறிக்கோளை வரையறுப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும். ஆனால், குறிக்கோளை நோக்கி உழைக்கத் துவங்கும் போது மலைப்பாகத் தோன்றும்.

மலைத்துப்போய் ஒதுக்கிவிடுவீர்களாயின் வாழ்க்கை முழுதும் ஆசைப்படுபராகவும், கனவு காண்பவராகவுமே கழிக்க வேண்டி நேரும்.

உங்கள் குறிக்கோளை ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் முடியாது என்னும் எண்ணம் உடனே வந்து உங்களிடம் ஒட்டிக்கொள்ளும்.

முடியாது என்னும் எண்ணத்தைத் தவிர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? நீங்கள் கொண்டிருக்கும் குறிக்கோளை, பகுதி பகுதியாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். பிரித்து எண்ணிப் பார்த்தால் மலைப்போ, திகைப்போ தோன்றாது.

உங்களால் ஆயிரம் கி.மீ. நடக்க முடியுமா? என்று கேட்டால் முடியாது என்னும் பதிலை உடனே கூறி விடுவீர்கள். உங்களால் ஆயிரம் கி.மீ. தூரம் ஆயிரம் நாட்களில் நடக்க முடியுமா? என்று கேட்டால் ஏன் முடியாது? என்று உற்சாகமாகக் கேட்பீர்கள்.

குறிக்கோளை அடைய முடியுமா? என்று ஒட்டுமொத்தமாக ஏன் சிந்திக்கிறீர்கள்? உயர்ந்த குறிக்கோள்களை பத்து ஆண்டுகளில் அடைந்தாலே மாபெரும் வெற்றிதான்.

பத்து ஆண்டுகளில் 120 மாதங்கள் உள்ளன. 3650 நாட்கள் உள்ளன. உங்கள் செயல்திட்டத்தை உருவாக்கும் போது குறிக்கோளை 10 ஆண்டுப் பகுதியாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு ஆண்டுப் பகுதியையும் 12 மாதப் பகுதியாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மாதப் பகுதிகயையும் 30 நாட்பகுதியாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.

இப்போது எளிதாகத் தோன்றுகிறதா இல்லையா? ரோம் நகரம் ஒரே நாளில் கட்டி முடிக்கப்படவில்லை, என்னும் பழமொழியைப் புரிந்து கொள்ளுங்கள்.

உலகம் பார்த்து வியக்கும் தாஜ்மகாலோ செங்கோட்டையோ பல ஆண்டுகள், பல மாதங்கள், பல்லாயிரம் நாட்கள் தொடர் உழைப்பில் உருவானவை தாமே!

பத்தடுக்கு மாளிகையேயாயினும் ஒவ்வொரு செங்கல்லாகவே அடிக்கப்படுகிறது. ஒவ்வொரு அடுக்காகவே உயர்ந்து மாளிகை ஆகிறது. ஆகவே, நீங்கள் எடுத்துக்கொண்ட குறிக்கோள் அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும். தொடர் முயற்சியும், விடா முயற்சியும் வெற்றி என்னும் பெருமையைத் தரும்.

இதை நீங்கள் புரிந்து கொண்டால் உழைப்பின் மேன்மையை உணர்ந்து செயல்படுவீர்கள். உழைப்பின் வாரா நன்மைகள் உள்ளனவா?

உழைப்பதற்கு அஞ்சுபவர்களைப் பாருங்கள் அவர்கள் இரண்டு வகையினர், ஒருவகையினர் வறுமையிலும், பற்றாக் குறையிலும் பரிதவித்துக் கொண்டிருப்பர். இன்னொரு வகையினர் குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குள்ளநரிகளாக இருப்பர்.

முதல்வகையினர் சோம்பேறிகள், இரண்டாவது வகையினர் மோசடிப் பேர்வழிகள்.

சோம்பேறிகள் தங்கள் ஆசைகளை, கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள அதிர்ஷ்டத்தை நம்பி இருப்பார்கள். லாட்டரிச்சீட்டு, குதிரைப் பந்தயம், சீட்டாட்டம் போன்றவைகளில் ஈடுபட்டு, மேலும் கடன்பாட்டு மனிதப் பிறவியை மாசுபடுத்திக் கொள்வார்கள்.

குறுக்குவழியினர் திருட்டு, ஏமாற்று, வாட்டி வதைத்து வட்டி வாங்குதல், கலப்படம், கள்ளச்சந்தை, கொள்ளை, கொலை, கொள்கையில்லா அரசியல், இலஞ்சம், ஊழல் போன்ற கொடுஞ்செயல்களால் பணம் சேர்க்க முயல்பவர்கள். இவர்கள் சேர்க்கும் செல்வம் களவினால் ஆகிய ஆக்கம். அது அளவிறந்து ஆவது போலக் கெடும்.

இந்த இருவகையிலும் சேராதவரா நீங்கள்? நல்லது. இயற்கை தரும் தண்டனைக்குத் தப்பி விட்டீர்கள்.

நீங்கள் செல்வம் சேர்க்க உழைப்பது நல்லது தான். ஆனால், இயற்கையுடன் முரண்பட்ட வழிகளில் முயன்றால், தற்காலிகமாக உயர்வது பொன்று தோற்றமளிப்பினும் முடிவு பரிதாபமாக இருக்கும்.

சட்டத்தின் பார்வையிலிருந்து ஒருவன் தப்பி விடலாம். இயற்கையின் பார்வையிலிருந்து எவரும் தப்ப முடியாது.

இயற்கை ஒழுங்கின்மையையோ, ஒழுங்கீனத்தையோ ஒருபோதும் சகித்துக் கொள்வதில்லை. சரியான நேரத்தில், சரியான முறையில் இயற்கை தன் நியாயத்தீர்ப்பை நேர்த்தியாய் வழங்கிவிடும்.

நீங்கள் இயற்கையுடன் ஒன்றுபட்ட முறையில் உழைப்பீர்களானால், அதுவே உயர்வைத் தரும். ஊக்கமின்றிச் சோம்பி இருப்பீர்களானால் அதுவே தாழ்வே உருவெடுக்கும்.

இயற்கையுடன் ஒன்றுபடும் போது உங்கள் செயல் திட்டங்களில் உண்மையும், நேர்மையும் ஒளிரும். அப்போது இயற்கை அன்னை உங்கள் கரம் பிடித்து வெற்றியை நோக்கி அழைத்துச் செல்வாள்.

இயற்கையின் உதவியோடு குறிக்கோளை அடைய செயல்திட்டத்தை வகுத்துவிட்டீர்கள். இனி தயக்கமோ, தாமதமோ இல்லாமல் முதல் அடியை எடுத்து வைத்து விடுங்கள். ஆயிரம் கிலோ மீட்டர் பயணம் ஆயினும் அது ஓரடியில்தான் தொடங்குகிறது என்பது அற்புதமான மொழி.

வெற்றி கிடைக்குமா? என்று சந்தேகத்துடன் சிந்திக்க வேண்டாம். நான் நம்புவது நடந்தே தீரும் என்னும் எண்ணத்துடன் அடுத்த அடையை எடுத்து வையுங்கள்.

உங்களை உற்சாகப்படுத்தக்கூடிய சில உளவியல் சார்ந்த, அறிவியல் ரீதியான ஒரு செய்தியை அறிந்து கொள்ளுங்கள்.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் முன்னேற வேண்டும், உயர வேண்டும், வளர வேண்டும், விரும்புவதை (வெற்றி) அடையவேண்டும் என்றே இயற்கை விரும்புகிறது. அதற்கேற்பவே மனிதனின் உடல் இயக்க விதிகளை இயற்றி வைத்திருக்கிறது.

ஒரு குழந்தையின் பரிணாம வளர்ச்சியை உற்று நோக்கினால் இந்த உண்மை தெளிவாகும்.

தாய் ஒரு குழந்தையைப் பெறுகிறாள். பிறந்தபின் அதைக் கையில் எடுத்துச் சீராட்டாமல் உயிர் வாழ்வதற்குரிய உணவை (பாலை) மட்டுமை புகட்டிவந்தால் போதும், குழந்தை அழுது, அலறி, பசியாறி, உறங்கி மீண்டும் அழுது... உயிர் வாழும்.

**முக்கிய பிறந்த தினங்கள்**

12-5-1820 – ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் (செஞ்சிலுவைச் சங்கம் அமையக் காரணமானவர்)

மூன்று மாதங்கள் இப்படியே தொடர்ந்தாலும் குழந்தை ஒருநாளில் குப்புற விழும். மீண்டும் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவை மட்டும் புகட்டிக்கொண்டே வந்தா அது தானே எழுந்து அமரும். தொடர்ந்து உணவூட்டி வந்தால் ஒரு நாள் தானே எழுந்து நிற்கும், விழும், அழும், ஆனாலும் அடங்கி இராமல் மீண்டும் எழுந்து நின்று தன் முதலடியை முன்னோக்கி எடுத்து வைக்கும்.

அதுமட்டுமின்றி உடல் மேல் நோக்கி வளரும். தன் சூழ்நிலையிலிருந்து அடைய முயற்சித்து வெற்றி பெறும்.

குழந்தையால் எப்படி முடிகிறது. இயற்கை, தான் இயற்றி வைத்துள்ள சட்டங்களின்படி அதனோடு ஒத்துழைக்கிறது.

ஆகவே, நீங்கள் வாழ்வில் உயரவேண்டும் என்பதும், முன்னேற வேண்டும் என்பதும், வளர வேண்டும் என்பதும், விரும்புவதை (வெற்றி) அடையவேண்டும் என்பதும் இயற்கைச் சட்டம். இயற்கையுடன் கரம் கோர்த்துக் கொண்டால். நீங்கள் எளிதாக வெற்றி பெற்றுவிடலாம். இயற்கையுடன் கரம் கோர்த்துக் கொள்ளவதா? எப்படி?



**உங்கள் குறிக்கோள் என்ன? அதை நிறை வேற்றுவதற்கு நீங்கள் வரையறுத்துள்ள ஆண்டு எது? அதை அடைவதற்கு நீங்கள் தேர்வு செய்துள்ள தொழில், வணிகம் அல்லது விற்பனை எது?**

அந்தத் தொழில், வணிகம் அல்லது விற்பனை தொடர்பான முதல் நடவடிக்கையை இன்றே, இப்பொழுதே தொடங்குங்கள். ஒத்தி வைக்காதீர்கள். தள்ளிப்போடாதீர்கள் அடுத்த நாளில் இன்னொரு நடவடிக்கை, மறுநாள் அது தொடர்பான மேலும் ஒரு நடவடிக்கை.

ஒரு வாரத்தில் பொருத்தமான ஏழு செயல்கள், முன்னேற்றத்தை நோக்கி, மாதத்தில் முப்பது செயல்கள், ஒரு ஆண்டில் முந்நூற்று அறுபத்தைந்து செயல்கள், ஒரு ஆண்டில் முற்நூற்று அறுபத்தைந்து செயல்கள்.

ஒரு ஆண்டு முழுவதும் நீங்கள் தொடர்ந்து செய்த செயல்கள் தொழிலாக, வணிகமாக, விற்பனை வாய்ப்பாக உருவாகி இருக்கும் முந்நூறு அறுபத்தைந்து செங்கற்கள் சேர்த்த ஒரு சுவராவது போன்று.

இப்படியாக வளர்ச்சியை நோக்கி நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு அடியும், பல சுவர்களாக மாறி ஒன்றுக்கொன்று இணைந்து வெற்றி என்னும் மாளிகையாக மாறிவிடும்.

முயற்சியை நிறுத்தாமல் விடாமுயற்சி யாகவும் தொடர்முயற்சியாகவும் கைக்கொள்ள வேண்டும் என்பதுதான் முக்கியமான இயற்கைச் சட்டம். தினமும் ஒரு சாதகமான நடவடிக்கை எடுக்கும் போது சட்டப்படி உங்களுக்கு வெற்றி உத்திரவாதம் ஆகிறது.

அதைவிடுத்து நேரம் கிடைக்கும் போதும், விருப்பம் ஏற்படும் போதும் மட்டும் உழைப்பது, மற்ற நேரங்களில் சோம்பி இருப்பது, விட்டு விட்டு முயல்வது, எவராவது விரட்டினால் மட்டுமே உழைப்பது என்று நினைப்பவருக்கு வெற்றி எட்டாக் கனியாகும்.

வெற்றி செடி வேர்பிடித்து விட்டதா என்று பிடுங்கிப் பார்த்து நடவேண்டாம். உழைப்பு என்னும் நீரையும், நம்பிக்கை என்னும் உரத்தையும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருங்கள்.

அன்பு தோழமைகளே ..

நாள்தோறும் ஒரு நடவடிக்கை என்னும் ஆலோசனையைத் தவறாமல் கடைப்பிடியுங்கள். கடைப்பிடிக்கும் போது இயற்கையின் கரத்தோடு உங்கள் கரம் இணைந்து விடுகிறது.

இணையும்போது இயற்கையின் கரத்திலுள்ள வெற்றி மாலை உங்கள் கழுத்திற்கு வந்துவிடுகிறது.

ஆகவே... அறிந்து கொள்ளுங்கள்.
**உழைப்பே உயர்வு,**
**உறக்கம் தாழ்வே!**

— தொடரும்.

**முக்கிய பிறந்த தினங்கள்**
**14-5-1923 – மிருணாள் சென் (வங்கத் திரைப்பட இயக்குநர்)**

# உடலினை உறுதி செய்




தமிழ்நிலா. **வே.சண்முகதேவி**

**கோவை, ஆம்பல் தமிழ்ச்சங்கம் உறுப்பினர்.**


**'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'** என்பது பழமொழி. உடலினை உறுதி செய் என்பது திருமூலர் மொழி. இந்த இரண்டு சொற்றொடர்களையும் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் தானே! என்றாவது ஒருநாள் உங்கள் உடலை நீங்கள் நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? உங்களை நீங்கள் ரசித்திருக்கிறீர்களா? நீங்கள் சந்தித்தவர்களிலேயே நீங்கள்தான் மிக அழகானவர் என்று மகிழ்ச்சி அடைந்திருக்கிறீர்களா? இதுவரை இல்லை என்றால் இனிமேல் உங்களை நீங்கள் ரசித்துப் பாருங்கள்.

உங்களிடம் உள்ள உள் அழகை நீங்களே பாராட்டிக் கொள்ளுங்கள்.வியப்பாக இருக்கிறதா ஆனால் அதுதான் சரியானது நாம் வைத்திருக்கக் கூடிய பொருள்களிலேயே விலைமதிக்க முடியாதது நம் உடல் தான். ஏன் தெரியுமா ? சரிவர இயங்கக்கூடிய நம் உடல் உறுப்பு ஒவ்வொன்றும் பல லட்சம் மதிப்புடையது அதை நாம் பாதுகாக்க வேண்டாமா?

உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான் உள்ளம் ஆரோக்கியமாக இருக்கும். உடல் ஆரோக்கியத்திற்கு நாம் இருக்கும் இடம் தூய்மையாக இருக்க வேண்டும். எனவே கூடுமானவரை காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள இடத்தில் இருப்பதைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். ஊட்டச்சத்து உள்ள உணவையே உட்கொள்ள வேண்டும். ஃபாஸ்ட் ஃபுட் என்று சொல்லக்கூடிய துரித உணவுகளை அதிகம் உட்கொள்ளக்கூடாது. உணவு என்பது உட்கொள்ளக்கூடிய பொருள். இது உடலுக்குள் சென்று தேவையான சக்தி மற்றும் வலிமையைத் தருகிறது. புரோட்டின், தாது உப்புச்சத்து, வைட்டமின், நீர் என எல்லாம் சரியாக இருந்தாலே நம் உடல் சீராக இயங்குகிறது என்று பொருள்.

நல்ல ஆயுள் வேண்டும் என்று நினைப்பவர்கள் ஆரோக்கியமான உணவையே உட்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல குழந்தைகளே! உடற்பயிற்சி செய்வது முக்கியமானது எங்களுக்கென்ன வயசாயிடுச்சா? நாங்க எதுக்கு உடற்பயிற்சி செய்யணும்னு நீங்க கேட்கிறது எனக்கு காதில் விழுகுது வயசானவங்க தான் உடற்பயிற்சி செய்யணும் அப்படிங்கற எண்ணத்தை முதலில் மாத்துங்க நீங்க என்னைக்குமே இளமையா இருக்கணுமா அப்ப உடனே உடற்பயிற்சி செய்ய தயாராகுங்க.

பள்ளிக்கூடம் போற அவசரத்துல காலை உணவு சாப்பிடாம போகாதீங்க நாள் முழுவதும் நீங்க வகுப்பை கவனிக்கும் ஆற்றல் நீங்க சாப்பிடக்கூடிய உணவில் இருந்து தான் கிடைக்கும். அதே சமயம் அளவான உணவு மட்டுமே சாப்பிடுங்க. அளவுக்கு அதிகமா ருசிக்காக எப்பொழுதுமே சாப்பிட வேண்டாம்.

அப்புறம் நீங்க முக்கியமா செய்ய வேண்டிய ஒரு விஷயம் என்ன தெரியுமா? நீங்க இருக்கக்கூடிய இடம் அது வீடா இருந்தாலும் சரி பள்ளியா இருந்தாலும் சரி எப்பவும் சுத்தமா இருக்கணும் அப்படிங்கிற விஷயத்தை மறக்க வேண்டாம் எண்ணெய் உணவு ஏதாவது சாப்பிட்டா உடனே வெதுவெதுப்பான தண்ணீர் குடிங்க.

ஆஹா! உடல் ஆரோக்கியத்தில் மிக முக்கியமான விஷயம் என்ன தெரியுமா நல்ல தூக்கம் . எட்டு மணி நேரம் நல்லா தூங்குங்க நல்ல உடல் நலம் அமையும்.

**" உடலில் உறுதி உடையவரே**
**உலகில் இன்பம் உடையவராம்"**

- கவிமணி

# ஆயுள் காப்பீடு உண்மையில் இலாபமா?



திருமதி. **தி. அனிதா தேவி**
சென்னை ஆம்பல் தமிழ்ச்சங்க உறுப்பினர்,
LIC சென்னை கோட்டம் 2, கிளை எண்.802
[CBO-12] ன் MDRT முகவர்.



ஆயுள் காப்பீடு பற்றி பலரும் தவறான புரிதல் கொண்டுள்ளனர். ஆயுள் காப்பீடு பற்றி பேசினாலே பலரும், நான் இல்லாத நிலையில் இழப்பீடு என் குடும்பத்துக்கு கிடைக்கும் சரி. நான் இருக்கும்போது எனக்கு என்ன நன்மை கிடைக்கும் என்பது பலரும் கேட்கும் ஒரு கேள்வியாகும். இதற்கு விளக்கம் தருகிறார் சென்னை ஆம்பல் தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகியும் லைப் இன்சூரன்ஸ் கார்ப்பரேசன் LIC முகவருமான/ ஆலோசகரான திருமதி அனிதா மணிகண்டன் அவர்கள்.

"காப்பீடு என்ற சிந்தனைத் தோன்ற முதல் தேவையாக இருந்தது இழப்புகளில் இருந்து ஒருவரைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமே. ஒரு நிறுவன திட்டத்தின் கீழ் பலரும் உரிய சந்தா (premium) செலுத்தி ஒரு ஒப்பந்தத்தின் கீழ் உறுப்பினர்களில் யாருக்காவது எதிர்கால இழப்பு ஏற்பட்டால் அதில் இருந்து காப்பது என்பதே காப்பீட்டின் அடிப்படை ஆகும். இது தேவையின் பொருட்டு எழுந்த சேவை ஆகும்.

பொருட்களின் இழப்புக்கு என்று உருவான காப்பீடு பின்னர் மனித வாழ்க்கைக்கும் இழப்பீடு தரும் வகையில் ஆயுள் காபீட்டுத் திட்டங்கள் உருவாகின. இந்த ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் அடிப்படை Term Insurance எனப்படும் குறித்த கால காப்பீடு ஆகும். இந்த திட்டம் உங்கள் வாழ்க்கைக்கு முழுமையான பணப் பாதுகாப்பு அளிக்கும் ஒன்றாகும். எனவே பிரிமியம் தொகையும் குறைவாகவும், கட்டிய பிரிமியம் திரும்பி வராத திட்டமாகவே இருக்கும்.

யாருக்கு, எங்கே, எப்படி, எப்போது எதிர்பாராத இழப்புகள் வரும் என்பதே தெரியாத நிலையில்தான் வாழ்க்கை சென்று கொண்டிருக்கிறது. இந்த எதிர்பாராத இழப்பு என்பது ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும் நிலையில் இருக்கும் ஒரு உறுப்பினரின் இழப்பாக இருந்தால் அந்தக் குடும்பத்தின் வலியை, வேதனையை எதனாலும் போக்கவோ, மாற்றவோ முடியாது, என்றாலும் பணம் என்ற தேவையை இந்த ஆயுள் காப்பீடு ஈடு செய்து அந்த குடும்பத்தின் வலியைக் கொஞ்சம் போக்குகிறது.

ஆயுள் காப்பீட்டை என்றைக்கும் யாரும் எதிர்மறையாக சிந்திக்க வேண்டாம். எதிர்மறை விளைவுகளில் இருந்து ஒரு குடும்பத்தைக் காக்க நேர்மறையாக உதவிக்கரம் நீட்டும் திட்டமே ஆயுள் காப்பீடு என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். என்றைக்குமே வருமானம் ஈட்டும் ஒரு உறுப்பினரே குடும்பத்தின் முக்கியமானவர். ஒரு காலத்தில் ஆண்கள் மட்டுமே வருமானம் ஈட்டுபவராக இருந்த நிலை மாறி இன்றைக்கு பெண்களும் அந்த இடத்தில் இருப்பது மனித சமூகத்தின் வளர்ச்சியும் மாற்றமும் ஆகும்.

இந்த சம்பாதிக்கும் நபர் திடீரென்று இல்லை என்றால் ஒரு குடும்பத்தின் நிலை என்ன என்பது அந்த குடும்பத்தின் அன்றாட நிகழ்வுகளை பார்க்கும் ஒருவரால் மட்டுமே

முடியும். நம்மை அந்த ஒரு நபராக நிறுத்திப் பார்த்தால் ஆயுள் காப்பீடு எவ்வளவு அதிமுக்கியமான ஒன்று என்பதை புரிந்து கொள்ளலாம்.

**இந்த ஆயுள் காப்பீடு நமக்காக என்ன செய்யும்?**

உங்களுக்காக, உங்கள் எதிர் காலத்துக்காக என எடுக்கும் ஆயுள் காப்பீடுக்கு நீங்கள் செலுத்தும் பிரிமியம் தொகைக்கு அரசு வருமான வரிச் சலுகையை பெற வழி செய்து இருக்கிறது. ஆயுள் காப்பீடு பாலிசிக்கு செலுத்தும் பிரிமியம் தொகைக்கு 80-சி பிரிவின் கீழ் வரிச் சலுகை உண்டு. ஒரு நிதியாண்டில் நீங்கள் செலுத்தும் பிரிமியம் தொகையில் ரூபாய் ஒன்றரை லட்சம் வரைக்கும் வரிச் சலுகைக்காக கழிக்க முடியும். அது மட்டுமா? உங்கள் குடும்பத்துக்கு கிடைக்கும் இழப்பீட்டுத் தொகைக்கு எந்த ஒரு வரிப் பிடித்தமும் செய்யப்படாது. முழுமையான வருமான வரி இல்லாத தொகை உங்கள் குடும்பத்துக்குச் சென்று சேரும்.



**நீங்கள் இல்லாத நிலையில் என்ன நன்மைகள் கிடைக்கும்? அதையும் பார்க்கலாம்.**

கடனில்லா வாழ்க்கை தான் இன்றைக்கு நிம்மதி தருவதாகும். ஆனால் அப்படி ஒரு வாழ்க்கை இன்றைய சூழலில் நினைக்க முடியாத அளவிற்கு பொருளாதார தேவைகளும், வாழ்க்கை சூழலும் மாற்றி இருக்கிறது. பல குடும்பத்தில் தனிநபர் கடன், வண்டிக் கடன், வீட்டுக் கடன், கடன் அட்டை என்று கடன்கள் பின்னிப்பிணைந்து இருக்கிற சூழல் தான் இன்றைக்கு நிலவுகிறது. இந்த நிலையில் அந்தக் குடும்பத்தில் வருமானம் ஈட்டும் ஒரு நபரின் மறைவு என்பது நடு ஆற்றில் படகில் விழுந்த ஓட்டை போலாகும். ஆனால், அந்த நபருக்கு ஆயுள் காப்பீடு இருந்தால் அந்தப் படகு எவ்வித சிக்கலும் இல்லாமல் கரை சேர முடியும். ஆம், ஆயுள் காப்பீடு தரும் இழப்பு அந்த குடும்பத்தின் எல்லா சுமையும் சுமக்கும் ஒரு மாற்றாக இருக்கும்.

கடன் சுமை மட்டுமா? மகிழ்வான எதிர்காலத்திற்கும் இந்த காப்பீடு கண்டிப்பாக உதவி செய்யும். ஆம், அந்த குடும்பத்தின் எதிர்காலத் தேவையை தீர்த்து, குடும்ப வாரிசுகளின் கல்வி மற்றும் திருமண செலவுகளுக்கும் அந்த காப்பீடு உறுதுணையாக இருக்கும். அது மட்டுமா? வயோதிக காலத்தில் உங்கள் துணையின் வாழ்க்கை யாரையும் எதிர்பார்த்து ஏக்கத்துடனும் மன வருத்தத்துடனும் துன்பத்துடன் இல்லாமல் அமைதியாக இருக்க நீங்கள் எடுக்கும் ஆயுள் காப்பீடு உங்களுக்கு பதில் துணையாக இருக்கும்.

ஆயுள் காப்பீடு ஒரு செலவா என்றால் இல்லை என்பதே பதிலும் உண்மையும் ஆகும். ஆயுள் காப்பீடு உங்கள் குடும்பத்தின் சிக்கல் இல்லாத எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு முதலீடு மட்டுமே. வருமுன் காப்பது தானே நமது பண்பாடு. தவறாமல் உடனடியாக நீங்களும் ஒரு ஆயுள் காப்பீடு எடுத்து விடுங்கள். இதற்கான பிரிமியம் தொகையும் அதிகமில்லை. டெர்ம் இன்சூரன்ஸ் எனப்படும் குறித்த கால காப்பீட்டு திட்டத்தில் சுமார் 50 லட்சம் காப்பீட்டுக்கு ஒரு ஆண்டுக்கான பிரிமியம் தொகை ரூ. 15,000/- க்குள் மட்டுமே வரும். இது காப்பீடு வழங்கும் நிறுவனங்களைப் பொருத்து சிறிது மாறலாம்" என்கிறார் அவர்.

**முக்கிய பிறந்த தினங்கள்**

20-5-1845 – அயோத்திதாசப் பண்டிதர் (மொழிபெயர்ப்பாளர்)



# பாமரன் பார்வையில் கம்போடியா

அந்தமான். கிருஷ்ணமூர்த்தி
உறுப்பினர், கோவை, ஆம்பல் தமிழ்ச்சங்கம்

**சிங்கப்பூரும் கம்போடியாவும்:**

கம்போடியாவின் பயணம் சிங்கப்பூரிலிருந்து அமைந்தது என்பதாலோ என்னவோ, அவ்வப்போது சிங்கப்பூரின் எண்ணங்களின் தொடர்பும் பிரதிபலித்துக் கொண்டே இருந்தது. சிங்கப்பூரில் இருந்த பொழுது, அங்கே கோவை தொழில்நுட்பக் கல்லூரியில் (சிஐடி) படித்த நண்பர் ஒருவரை கல்லூரியில் படித்த பிறகு அப்பொழுதுதான் முதன்முறையாக சந்தித்த அனுபவம் கிடைத்தது. கிட்டத்தட்ட இருவருமே முகத்தை மறந்து விட்ட நிலையில், புகைப்படமும் புலனமும் மட்டுமே கை கொடுத்து உதவியது; முகம் பார்க்கவும் உதவியது. சிங்கப்பூர் பற்றிய செய்திகள் எல்லாம் பேசி காதுகள் செழித்து போன பின்னர் நான், நண்பர்தானே என்ற முறையில் ஒரு கேள்வியை வைத்தேன். சிங்கப்பூரை பற்றி ஆஹா ஓஹோ என்று பலர் பலவற்றை சொல்லி இருக்கிறார்கள்; சிங்கப்பூரிலுமா இப்படி? என்று சொல்லும் அளவிற்கு ஏதாவது செய்திகள் இருக்கிறதா? என்று. அப்படி ஏதும் இருப்பதாக தெரியவில்லையே என்பதாகத்தான் பதில் வந்தது.

**கோவை நட்பூ வட்டம்:**

நான் தான் அதனையும் எடுத்துக் கொடுத்தேன். உதவிக்கு யாருமே வருவதில்லை சிங்கப்பூரில். அதாவது அந்த உதவி தேவைப்படும் வகையில் கூட நிலைமையினை வைத்திருப்பதில்லை சிங்கப்பூர். நமக்கெல்லாம் அந்த அளவிற்கு சைன் லாங்குவேஜ் என்று சொல்லப்படும் அந்த்த தகவல் தருகின்ற பாங்கு, ஒரு நேர்த்தி மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால் அந்தத் தகவல் எத்தனை பேருக்கு எளிதாக புரியும்? என்றுதான் எனக்கு புரியவில்லை என்று ஆரம்பித்தேன்.

**குழப்பும் எக்ஸ்பெக்டட் மதர்**

உதாரணமாக எக்ஸ்பெக்டட் மதர் என்று ஓர் அபாயகரமான இடத்தில், சுற்றுலா பயணிகள் செல்கின்ற இடத்தில் குறிப்பிட்டிருந்தனர். நான் நினைத்தேன், சிறு குழந்தைகளாக இருந்தால், சிறிது நேரம் தன் அம்மாவைப் பிரிந்தால் கூட, அதன் பிறகு அம்மாவைத் தேடும் குழந்தையாக



கம்போடியாவின் மாபெரும் ஏரி

இருப்பார்களோ என்று தான் முதலில் நினைத்தேன். என்னுடைய ஆங்கில அறிவு அப்படித்தான் சொல்லியது. ஆனால் கூட வந்த சிறுவர்களும் சிறுமியர்களும் தான் இதனை சொன்னார்கள், கர்ப்பமானவர்கள் இந்த பயணத்தை தவிர்க்க வேண்டும் என்று சொல்லி எக்ஸ்பெக்டட் மதர் என்பதாக புரிய வைத்தனர் என்று நான் என்று சொல்லியது தான் தாமதம், அடக்க முடியாமல் ஒரு சிங்கப்பூர் நண்பர் தன்னுடைய ஆதங்கத்தை வெளியிட்டார். எனக்கும் அதே குழப்பம் இருக்கிறது கழிவறையில் ஆண்கள் கழிவறை எது? பெண்கள் கழிவறை எது? என்று கண்டுபிடிப்பதில்.

**கழிவறை ஆண்? பெண்?**

பெரும்பாலும் ஓவியர்கள் தங்களுடைய திறமைகளை கழிவறையில் இருக்கும்போது தான் காட்டுவார்கள் என்று சொல்லுவார்கள். அது ஒரு வகையில் சரியாய்த்தான் இருக்குமோ? என்று தான் நினைக்கிறேன். ஆனால் அவசரமாக அங்கு செல்லும் பொழுது முதல் முதலில் ஒரே பார்வையில் வருகின்ற சிக்கல் என்று தயங்கி தயங்கி சொன்னார். அவர் அவ்வளவு தயங்கி தயங்கி சொன்ன செய்தி எனக்கு மிகப்பெரிய பிரச்சனையாகப்பட்டது



பல சிலைகளின் நிலை இப்படித்தான்



அங்கோர்வாட் கோவிலின் ஒரு வாயில்

கம்போடியாவில் போய் இறங்கினவுடன். அவருக்கு படம் அனுப்பி வைத்தேன் கம்போடியாவை பார்க்கும் பொழுது சிங்கப்பூர் எவ்வளவோ பரவாயில்லை போலிருக்கிறது என்று நீங்களும் ஒரு பார்வை பார்த்துக் கொள்ளுங்கள் இப்படியும் படங்கள் இருக்கிறது என்பதற்காக.

**தமிழ்த்தாத்தா உ வே சா**

பொதுவாக ஒவ்வொரு புத்தகம் படிக்கும் பொழுதும் நாம் ஏதோ ஒரு செய்தியை கற்கிறோம் என்பார்கள். அந்த வகையில் தமிழ் தாத்தா என்று நாம் அழைக்கும் உ வே சுவாமிநாத ஐயர் அவர்கள் தன்னுடைய சுயசரிதமான என் சரித்திரம் என்பதை படிக்கும் போது பலவற்றை நம்மால் கற்ற இயலும். தன்னுடைய வாழ்க்கையில் தனக்கு உதவியவர்கள் யார்? யாரிடமெல்லாம் அவர் மகிழ்வோடு இருந்தார்? யாரெல்லாம் அவரை மகிழ்ச்சியாக வைத்திருந்தார்கள்? இவர்களைப் பற்றி மிகவும் விரிவாக சொல்லிவிட்டு, யாரெல்லாம் இவரை வேதனைக்கு உள்ளாக்கினார்களோ, யாரால் அவர் மிகவும் மனம் துன்பப்பட்டாரோ, சில சமயங்களில் திருடர் என்ற பட்டம் கூட சூட்டப்பட்டாரோ, அவர்கள் யார் என்கின்ற விவரங்களை மிகவும் இலேசாக எழுதிவிட்டு, அவர்களைப் பற்றிய எந்த விதமான குறிப்பு இல்லாமல் வைத்திருந்தது தான் அந்த நூலின் சிறப்பு என்று சொல்லலாம். அந்த நூலில் கற்ற பாடத்தை பயணத்திலும், அதுவும் ஒரு அன்னிய நாட்டிற்கு பயணம் செய்திருக்கும் போது அதை எப்படி நாம் கவனிக்காமல் இருக்க முடியும்? ஆகவே அது குறை என்று பார்க்காமல் ஒரு கலை என்று கலைக்கண்ணால் பார்க்க வேண்டும் என்ற பார்வையில் நாம் மேலும் பயணிப்போம்.

**ஒரு டாலர் தேசம்:**

அமெரிக்காவை டாலர் தேசம் என்றும் அழைப்பர். ஒருகாலத்தில் டாலர் என்ற பணத்தினை அமெரிக்க நாடு மட்டுமே பயன்படுத்தி வந்த்து. பின்னர் பல நாடுகள் அந்தந்த நாடுகளின் டாலர்களைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். ஆனால் இன்றளவும் கூட, டாலர் என்றால் அது அமெரிக்க நாணயம் என்றே கொள்ளப்படுகின்றது. உலகம் முழுக்க பரிவர்த்தனைக்காக டாலர் ஏற்றுக் கொள்ளப்பட்டுவருகின்றது. கம்போடியாமட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? ஆனால் நாம் வாங்கும் பொருள் எதுவாக இருந்தாலும் குறைந்தபட்சமாக ஒரு டாலர் (அமெரிக்க டாலரே தான்) தந்திட வேண்டி இருக்கிறது. எனவே, அமெரிக்காவை ஒரு டாலர் தேசம் என அழைத்தால், கம்போடியாவையும் ஒருடாலர் தேசம் என அழைப்பதில் தவறே இல்லை எனத் தோன்றுகிறது.

**மன்னர் வரவேற்கிறார்:**

கம்போடியாவில் உலகில் மிகப்பெரிய கோவிலைச் சுற்றிப்பார்க்கச் செல்ல இருக்கிறோம். கால் வலிக்கச் சென்று பார்த்ததை



விஷ்ணு சிலை

நீங்கள் கால் மேல் கால் போட்டபடி படித்து இரசிக்கலாம். ஆனால் அதற்கு முன்னர் விமான நிலையம் விட்டு வெளியே வந்தவுடன் பவ்யமாய் அரசர் ஒருவர் யானை மீது அமர்ந்தபடி இருக்கிறார். அமர்ந்த தோரணை பார்த்தாலே, ஏதோ அரசர் போல் தான் தெரிகிறது? யாராய் இருக்கும்? அடுத்த இதழில் தொடர்போம்.

- தொடரும்

# வலி நிறைந்த வழி


**ஆ.தேவிகா**

**உதவி பேராசிரியர்**

**ஏ.ஜே.கே. கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**உறுப்பினர், கோவை ஆம்பல் தமிழ்ச் சங்கம்**


“மனிதன்” இயற்கையின் உன்னத படைப்புகளில் ஒன்று. இம்மனிதனின் வாழ்வில் அடிப்படையாக திகழ்வது ஆண் – பெண் என்ற பாகுபாடு ஆகும். இதுவே வாழ்வின் அடித்தளமாகவும், ஆதாரமாகவும், மூலமாகவும் அமைகிறது. இந்த அடிப்படையான பால் நிலையிலிருந்து விலகி பால் திரிபு அடைந்தவர்கள்தான் இவர்கள். மூன்றாம் பாலினமாய் தன்னை நிலை நிறுத்தி தடைகளை எதிர்க்கொண்டு வரலாறு படைத்துக் கொண்டிருப்பவர்கள்.

மூன்றாம் பாலினமாய் இருக்கும் இவர்களை பல்வேறு காலங்களில் மக்களால் பல பெயர்கள் கூறி அழைக்கப்பட்டுள்ளனர். தமிழில் பேடி, அரவாணி, அலி, அண்ணகர், திருநங்கை என்றும், வடமொழியில் ஹிஜடா, கின்னர், கீவ், சக்கா, கோஜா, மௌசீ என்ற பெயர்கள் இவர்களுக்கு உண்டு.

இவர்கள் முழு ஆணும் அல்ல, முழு பெண்ணும் அல்ல. இவர்களில் பல வகையுண்டு. பிறக்கும் போது திருநங்கைகளாக பிறந்தால் அவர்களை புச்சா என்றும் சில காரணங்களால் திருநங்கைகளாக தன்னை அர்பணித்து கொள்பவர்களை நீலிமா என்றும், உடல் மற்றும் மன ரீதியாக தன்னை ஒரு பெண்ணாகவும் அல்லது பெண்ணுக்கு மிக நெருக்கமாகவும் உணர்பவர்களை மனசா என்றும், உடல் குறைபாடு அல்லது பாலியல் குறைபாடு ஆகிய கோளாறு காரணமாக தன்னை திருநங்கையாக மாற்றிக்கொண்டு வாழ்பவர்களை ஹன்சா என்றும், பணம் சம்பாதிக்க மிக அதிகமான அளவில் போலி திருநங்கையாக உருவம் கொள்பவர்கள் அபுஆ என்றும் அழைக்கப்படுகிறார்கள். சில நேரங்களில் இயல்பான ஆண் குழந்தைகளை கூட ஏதேனும் காரணம் காட்டி கட்டாயப்படுத்தி திருநங்கைகளாக மாற்றப்படுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

“ஆணாய் பிறந்து பெண்ணாவதும்
பெண்ணாய் பிறந்து ஆணாவதும்
வீணாய் போன காலத்தின்
சூழ்ச்சியய்யா! சூழ்ச்சியய்யா!

இந்த வரிகள் முப்படை முருகன் எழுதிய மலராத மொட்டுகள் என்ற தலைப்பில் திருநங்கைகள் பற்றிய கவிதை. ஆம், இவர்களின் மனம், உடல் மாற்றம் அறிவியல் செய்த பாவம்தான். இவர்கள் செய்த குற்றமில்லை. ஆனாலும் சமூகம் இவர்களை பார்க்கும் பார்வை ? இவர்களின் வரலாறு ?

வரலாறு தொடரும்

**முக்கிய பிறந்த தினங்கள்**

26-5-1943 – நடிகை மனோரமா, 28-5-1923 – என்.டி.ராமராவ் (நடிகர், ஆந்திர முன்னாள் முதல்வர்)



# 21- ஆம் நூற்றாண்டின் பெற்றோரும் பிள்ளைகளும் ஓர் பார்வை

கவிஞர். சுப்புலட்சுமி.ஸ்ரீ
மாவட்டத் தலைவர்
கிருஷ்ண கிரி மாவட்ட, ஆம்பல் தமிழ்ச்சங்கம்.

**இன்றைய சூழல்:**

"நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பது ஆன்றோர் வாக்கு. ஆம் உலக இயக்கங்களைப் பற்றிய புரிதல்களைக் குழந்தைகள் முதலில் குடும்பத்தில் இருந்துதான் கற்றுக்கொள்கிறார்கள். ஏனெனில், அன்பு என்ற உயர்ந்த பண்பில் கட்டமைக்கப்பட்டதுதான் நமது கலாச்சாரம். இதன் வழியாகவே பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள பிணைப்பு, அடுத்தடுத்த தலைமுறைகளையும் தாங்கி நிற்கிறது. ஆனால், இன்றைய சூழ்நிலையில் இத்தகைய பண்பாட்டுக் கட்டமைப்புகள் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதைப் பற்றி இங்கே சிந்திப்போம்.

**இக்காலக் குடும்பச் சூழல்:**

ஆழம் விழுதுகளாய், கூட்டுக்குடும்பங்களாக தழைத்திருந்த நமது தமிழர் வாழ்வியல் முறை இன்று நாகரீக மோகத்தால் தனிக்குடும்பங்களாக சிதறிவிட்டன. இங்கே பாசமும் பந்தமும் பணத்தின் முன்னால் தோற்றுப்போய் வலுவிழந்து போய்விட்டன. இதனால் குடும்பநிலை தண்ணீர் இல்லா மீனைப்போல தத்தளித்துத் தடுமாறி கொண்டுதான் உள்ளது. பெரும் விருட்சங்களாக வேரூன்றி இருந்த உறவு கூட்டங்கள் எல்லாம் பணத்தின் வாசத்தை சுவாசிக்கத் தொடங்கிய பின்னர், பாசபந்தங்கள் இங்கே அறுந்து போனது. இச்சூழ்நிலை பிள்ளை வளர்ப்பில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி சரியான ஒழுக்க நெறியும் உரிய பாதுகாப்பும் இல்லாமலும் போனதற்கு முக்கிய காரணமாகிவிட்டது எனலாம்.

**பெற்றோரின் மனநிலை:**

'நாமிருவர் நமக்கொருவர்' என்ற மனநிலையோடு உள்ள பெற்றோர் வீட்டிற்கு ஒரு பிள்ளை என்று வாழ்கின்றனர். இச்சூழ்நிலையில் ஒற்றைப் பிள்ளையை ஒன்றும் சொல்லாமல் பொத்தி பொத்தி வளர்க்கிறார்கள். கேட்டதையெல்லாம் எளிதில் வாங்கி கொடுப்பதோடு மிகவும் சுதந்திரதோடு வளர்க்கின்றனர். இது எப்படி உள்ளது என்றால் அழகிய பட்டத்தை செய்து வானில் பறக்கவிட்டு கயிற்றை அறுத்துவிட்டது போல் இருக்கிறது. கயிறு அறுந்த பட்டம் தட்டுத்தடுமாறி தடம் மாறி தன்னைத்தானே அழித்துக் கொள்வது போல என்பதை பெற்றோர்கள் உணர்வதேயில்லை. பாசத்தைக் காட்ட தெரிந்த பெற்றோர்கள் பிள்ளைகளின் மனதை பக்குவப்படுத்துவதற்கான நுணுக்கங்களை ஏனோ...அறிய தவறிவிடுகின்றனர்.

**ஊடகமே உறவு:**

அழுகின்ற குழந்தையை அடக்க அலைபேசி.., கதை சொல்லும் பாட்டிமார்கள் தொலைக்காட்சி சீரியலில் கவனம்.., நிலாவைக் காட்டி சோறூட்டிய தாய்மார்களோ ஆன்றாய்டுகளில் முடக்கம்..., அலுவலக பணிகளை அலுக்காமல் செய்யும் அப்பாவுக்கோ வீட்டிற்குள் நுழைந்ததும் ஆறுதல் தரும் அலைபேசியின் நாட்டுநடப்பு..., ஆளுக்கொரு

மொபைல்... ஆளுக்கொரு பக்கம்... இதுதான் இன்றைய பெரும்பான்மையான குடும்ப நிலைகள். இங்கே மனிதர்கள் உறவுகளோடு உரையாடுகிறார்களோ இல்லையோ ஊடகமே உறவாகிப்போனதுதான் உண்மை. இங்கே பிள்ளை வளர்ப்பு என்பது பெரும் சவாலாகிப் போனது.

**பிள்ளைகள் வளரும் சூழல்:**

கையில் தொலைபேசி, கண்ணில் கண்ணாடி, வளர்ந்த பிள்ளை என்றால் முகத்தில் தாடி. இதுதான் இன்றைய பிள்ளைகளின் அடையாளம். பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாய சூழலில் பிள்ளைகளை கவனமாக கையாள்வதில் நேரமின்மை மற்றும் பிள்ளைகள் பெரியவர்களை சார்ந்து வாழ்கிறார்களோ இல்லையோ ஊடகத்தை சார்ந்து வாழும் நிலை, தட்டிக் கேட்கும் பெரியோர்களே இல்லாமல் தட்டுத் தடுமாறி தடம்மாறும் சூழலை எளிதில் ஏற்றுவிடுகிறது இன்றைய இளைய தலைமுறை.

**செல்லாமல் போன நீதி இலக்கியங்கள்:**

இந்த ஊடகம் வளர்க்கும் பிள்ளைகளுக்கு தன்னைச் சுற்றி எவ்வளவுதான் நீதி கதைகள், நீதி போதனைகள், நீதி இலக்கியங்கள் குவிந்து கிடந்தாலும் அவையெல்லாம் அர்த்தமற்று போய்விட்டது. ஏன் பாடசாலையில் கற்பிக்கும் நீதி கருத்துகள் கூட செல்லாமல் போய்விடுகிறது. இன்றைய இணைய உலகில் வாழும் இந்த இணைய பிள்ளைகளைக் கட்டுப்படுத்த இணைய திருவள்ளவர்..., இணைய மகாத்மா..., இணைய ஏசுபிரான்..., இணைய புத்தர்..., இணைய வள்ளலார் என புதிதாய் அவதாரம் எடுத்து வரவேண்டும். இன்றைய சூழலுக்கேற்ப புதிதாய் இலக்கியங்களை படைக்க வேண்டும்.

**பெற்றோர்களும் பிள்ளைகளும்:**

> **"நாடாகு ஒன்றோ; காடாகு ஒன்றோ;**
> **அவளாகு ஒன்றோ; மிசையாகு ஒன்றோ;**
> **எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி**
> **நல்லை; வாழிய நிலனே!"**

என்ற புறநானூறு பாடலின் கூற்றுப்படி எத்தகைய சூழ்நிலை என்றாலும் எங்கு மக்கள் நலமாக உள்ளார்களோ அவ்விடம் மேன்மை பெற்றுத் திகழும். இக்கூற்றை குடும்ப சூழலில் வைத்துப் பார்த்தாலும் சான்றாண்மை தன்மையோடு குடும்பத்தில் உள்ள பெரியவர்களும் தலைமை பண்பில் உள்ள பெற்றோர்களும் இருந்தார்கள் என்றால் அங்கே பிள்ளைகளும் நல்ல வழியில் வளர்வார்கள்.

**மனப்பக்குவம் அவசியம்;**

அன்பு, ஆதரவு, அரவணைப்பு, இரக்கம், ஒழுக்கம் போன்ற உயரிய பண்புகளோடு பெரியவர்கள் திகழ்ந்து பிள்ளைகளை நற்சூழலில் வளர்க்க வேண்டும். ஏனெனில், குடும்பம் என்ற கோயிலில் அன்பு என்ற உள்ளங்கள்தான் தெய்வமாக இருந்து தலைமுறையைக் காத்து நிற்கின்றன. அந்த தலைமுறையைக் காக்கும் குடும்ப அங்கத்தினர் நன்னெறிகளைப் பின்பற்றி, அறத்தோடு வாழ்ந்து, நல்வழியில் செல்வது அவசியமாகும். மேலும் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையே உள்ள தலைமுறை இடைவெளிகளைப் புரிந்து மன இடைவெளி குறையாமல் வாழ்வதற்கான மனப்பக்குவம் அடைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

நமது கடமை;

> "பாலூட்டும் அன்னை அவள் நடமாடும் தெய்வம்
> அறிவூட்டும் தந்தை நல் வழிகாட்டும் தலைவன்
> துணையாக கொண்டு நீ நடைபோடு இன்று
> உருவாகும் நல்ல எதிர்காலம் ஒன்று"

என்னும் கவிஞர் வாலி அவர்களின் பாடல் வரிகள் மற்றும் பல்வேறு அறிவுரை பகரும் பாடல்களையும் இக்காலத் தலைமுறையினரும் கேட்டுப் பொருள் உணரும் ஆவலைத் தூண்ட வேண்டும். பிள்ளைகளை வளர்க்கின்ற மிகப் பெரிய பொறுப்பு பெற்றோருக்கு மட்டுமல்ல ஆசிரியர்..ஏன் இந்த சமுதாயத்திற்கும் உண்டு. இம்மூன்று சூழ்நிலையிலும் பிள்ளைகளின் நடவடிக்கைகளை கெடுக்கும் வகையில் எந்த ஒரு செயலும் வளரவிடாமல் தடுப்பது மிக மிக அவசியம். எதிர்காலத் தூண்களான பிள்ளை செல்வங்களைக் கெடுக்கும் தீய முள்செடிகளை வளரவிடாமல் தடுப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**வாழ்க தமிழ்..!**

**வளர்க ! தமிழர் பண்பாடு !**

- தமிழன்புடன்

# சிந்துவின் இலக்கணத்தைச் செப்பும் நூல்கள்



முனைவர் லொ. ஆ. உமாமஹேஸ்வரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
உறுப்பினர், சென்னை ஆம்பல் தமிழ்ச்சங்கம்

சிந்து என்பது நாட்டுப்புற இசைப் பாடல் வகை. இறைப் பற்று, இன்ப துன்ப நிகழ்ச்சிகள், தொழில்கள், கலையுணர்வு முதலியவற்றின் காரணமாக மக்கள் பாடிய இசைப் பாடல்களிலிருந்து முகிழ்ந்தவை சிந்து வடிவங்கள் என விளக்குகிறார் **இரா.திருமுருகன்.**1

**பஞ்சமரபில்,**

**செப்பரியசிந்து திரிபதை சீர்ச்சவலை**
**தப்பொன்றும் இல்லாச் சமபாதம் மெய்ப்படியும்**
**செந்துறை, வெண்டுறை தேவபாணி**
**வண்ணமென்ப**
**பைந்தொடியாய் இன்னிசையின்பா......**

(பாடலியல், நூற்பா-37) 2

என எட்டு வகைப் பாடல்களை இன்னிசையின் பாவென அறிவனார் குறிப்பிடுகிறார். அவற்றுள் ‘சிந்து’ என்பது இரண்டடியாய் தம்முள் ஒத்து வருவனவாய் அமைந்தது பண்டைக்காலச் சிந்து என்கிறார்.3 ஓசை சிந்தி எழுவதினாலே சிந்து எனப்பெயர் பெற்றது எனலாம்.

**வீரசோழியம்,**

**எழுசீரடியிரண்டாற் குறளாகு மிரண்டடி யொத்**
**தழி சீரிலாதது சிந்தாமடி மூன்று தம்மிலொக்கில்...**

(யாப்பு – நூற்பா – 20, ப-102)

எழுசீரடி இரண்டாய் வருவது குறளாம். அடியிரண்டாய்த் தம்முள் அளவொத்தது சிந்தாம்4 என்று ‘சிந்துப்’ பாடலுக்குரிய இலக்கணத்தைச் செப்புகிறது.

சிந்துப்பாவிற்கு இலக்கணம் வகுத்த இரா. திருமுருகன் தமது சிந்துப்பாவியல் எனும் நூலில், தாளமுடைய பாடல்களின் வகையினைக் குறிப்பிடும் பொழுது,

**தாள நடையுடைப் பாக்கள்,**

**வண்ணம், சந்தம், சிந்தே, உருப்படி**
**என்ன நால்வகையாக நவிலப்படுமே.**

என்கிறார். இசையோடு தாளமும் சேர்ந்து நடக்கும் பாக்கள் இசையளவு பாக்கள், அவ்இசையளவுப் பாக்கள் நான்கில் ஒன்றாக சிந்துப் பாக்களைக் குறிப்பிடுகிறார்.5

மேலும்,

**ஈரடி அளவொத்தியலும் பாக்கள்**
**சிந்தெனும் வகையைச் சேரும் என்ப.**

என்கிறார். இசையளவு பாக்களின் பாற்பட்ட சிந்துப் பாக்கள் தாள நடையை அடிப்படையாகக் கொண்டவையாகலின் அப் பாக்கள் ஒவ்வோர் அடியிலும் நான்கு சீர்களுக்குக் குறையாமல் கொண்டிருக்கும். யாப்பிலக்கண முறையில் அமைந்த மிகச் சிறிய அடியும் சிந்து இலக்கண முறையில் நாற்சீராக அளவிடப்படும் என்று ‘சிந்துப்பாவிற்கு’ இலக்கணம் கூறி, இரண்டடிகள் அளவொத்தும் ஒரெதுகை பெற்றும் நடக்கும் பாடல்கள் சிந்துப்பா என்று கூறப்படும் என விளக்கம் தருகிறார்.6

**நாலடி என்னும் அளவின் இழிந்தே**
**ஒன்றே முக்கால் அடியின் உயர்ந்ததால்**
**சிந்தெனும் பெயரைச் செப்பினர் என்க.**

என சிந்துப் பெயர்க் காரணத்தையும் விளக்குகிறார்.

‘சிந்துப் பாடல்கள் தகவல் பரிமாற்றத்திற்கு எதனால் பயன்பட்டுள்ளது, மக்களை எளிதில் சென்றடையக் காரணம் என்னவென நோக்கின், சிந்துப் பாடல்களின் அளவு (சிறுமை) மற்றும் இசை, தாளத்துடன் கூடிய பாடல் எளிமை. இவை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எளிதில் சென்றடைய ஏதுவாகியிருக்கும். சிந்து இசையுடைய பல பாடல்கள் முக்கூடற்பள்ளில் இருப்பதை இங்கு இணைத்து நோக்கலாம்.

**முக்கிய நினைவு தினங்கள்**
3, 1981 – நர்கீஸ், இந்தித் திரைப்பட நடிகை. பரிசுகள் பல பெற்றவர்.

# கோடை விடுமுறை பயணம்

க. விஜயசாமுண்டீஸ்வரி
மாவட்ட துணைத்தலைவர்
திருவள்ளூர் ஆம்பல் தமிழ்ச்சங்கம்

மே-2

மூவரும் பேருந்தில் ஏறி பயணம் செய்கிறார்கள். பயணத்தில் வழியில் வைஷ்ணவி ஆலயம் பார்த்ததும்.....

**தியா :-** பாட்டி பாட்டி இது வைஷ்ணவி ஆலயம் தானே?

**விஜி பாட்டி :-** ஆமாம் தியா.

**தேஜூ :-** வைஷ்ணவி ஆலயத்திற்கு ஒரு நாள் அழைத்துச் செல்லுங்கள் பாட்டி.

**விஜி பாட்டி :-** சரிம்மா. வைஷ்ணவி ஆலயம் பற்றி தங்களுக்கு தெரிந்ததை கூறுங்கள்.

**தியா :-** வெள்ளிக்கிழமை பூ(ஜை)சை முடிந்ததும் பிரசாதம் அக்காரவடிசல் நெய் சொட்டச்சொட்ட தருவார்களே பாட்டி. மிகவும் ருசியாக இருக்கும்.

**விஜி பாட்டி :-** ம்ம்....அது மட்டும் தானா? வேறு விஷேச பூசைகள்?

**தேஜூ :-** தினசரி பூசைகள் இல்லாமல் சிறப்பு பூசைகள் ஒவ்வொரு மாதமும் மூலம் நட்சத்திரம் பூசை, பௌவுர்ணமி சாலிக்கிராமம் பூசை, பூரம் நட்சத்திரம் பூசை நடைபெறும் பாட்டி.

**விஜி பாட்டி :-** ஆமாம். தேஜூ.

**தியா :-** வருடத்திற்கு 6 முறை தைலாபிஷேகம் நடைபெறும் பாட்டி. பல மூலிகைகளைக் கொண்டு அந்த ஆலயத்திலேயே தைலத்தைக் காய்ச்சும் போது வரக்கூடிய நறுமணம் நினைவுக்கு வருகிறது பாட்டி.

**விஜி பாட்டி :-** அருமை அருமை தியா. நன்றாக நினைவில் வைத்திருக்கின்றாயே!

**தேஜூ :-** புரட்டாசியில் நவராத்திரி திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும் பாட்டி. ஒன்பது நாட்களும் ஒன்பது அலங்காரங்களில் வைஷ்ணவி தேவியை தரிசிக்கலாம். அப்போது இந்தியா முழுவதிலிருந்து பக்தர்கள் வந்து தங்கியிருந்து வழிபட்டுச் செல்வார்கள் பாட்டி.

**விஜி பாட்டி :-** மிகச் சிறப்பு. சரியாகக் கூறினாய் தேஜூ.

**தியா :-** வைகுண்ட ஏகாதசிக்கு பெருமாள் அலங்காரம் செய்து, சொர்க்கவாசல் திறப்பும், சிவராத்திரி என்றால் சிவன் அலங்காரம், கிருஷ்ண ஜெயந்தி என்றால் கிருஷ்ணர்



அலங்காரம் என வைஷ்ணவி தேவியை அலங்காரம் செய்வது மிகவும் சிறப்பானது பாட்டி.

**விஜி பாட்டி :-** அனைத்து விஷேச நாட்களில் பல்வேறு அலங்காரங்களை தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் இப்பகுதியில் வசிப்பவர்கள் தியா.

**தேஜூ :-** திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் திருப்புகழ் வகுப்பு வைஷ்ணவி ஆலயத்தில் இலவசமாக நடைபெறும் பாட்டி. அந்த குழுவிற்கு வைஷ்ணவி மகளிர் மண்டலி சபா எனப் பெயர். இவர்கள் பல ஆலயங்களுக்குச் சென்று திருப்புகழ் கச்சேரி செய்வார்கள். இதுபோன்ற பல தகவல்களை கூறிக்கொண்டே போகலாம் பாட்டி.

**விஜி பாட்டி :-** மிகவும் சிறப்பு வைரங்களே.

**தியா :-** பாட்டி இங்க பாருங்க முருகப்பா தொழில்நுட்பக் கல்லூரி..

**விஜி பாட்டி :-** ஆமாம் தியா. முருகப்பா தொழில்நுட்ப (பாலிடெக்னிக்) கல்லூரி ஒரு அரசு உதவி பெறும் நிறுவனமாகும், கல்லூரி இந்தியாவின் சென்னை, ஆவடியில் அமைந்துள்ளது. பட்டயம் (டிப்ளமோ) திட்டங்கள் கட்டிடபொறியியல், (சிவில் இன்ஜினியரிங்) மற்றும் கணினி பொறியியல் (கம்ப்யூட்டர் இன்ஜினியரிங்) படிப்புகளில் மின்சார பொறியியல் (எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங்) , இயந்திர பொறியியல் (மெக்கானிக்கல் இன்ஜினியரிங்), மின்னனுவியல் (ரோபாட்டிக்ஸ்) போன்றவை அடங்கும் . மூன்று வருட பட்டயப்படிப்பு கல்வி கற்பிக்கப்படுகின்றது தியா.

**தேஜூ :-** இக்கல்லூரியில் தானே பலர் படித்து நல்ல நிலையில் உள்ளார்கள். இக்கல்லூரியில் படிக்க நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தால் மட்டுமே இடம் கிடைக்கும் அப்படித்தானே பாட்டி.


**விஜி பாட்டி :-** ஆமாம்மா.

- தொடரும்




# மூளைக்கு வேலை

- **உங்களிடம் நூறு ரூபாய் இருக்கிறது. அதைக் கொண்டு 100 காய்கறிகள் வாங்க வேண்டும்.**
- **கத்தரிக்காய் ரூபாய்க்கு இருபது**
- **முருங்கைக்காய் ரூபாய்க்கு ஒன்று.**
- **பூசணிக்காய் ஐந்து ரூபாய்க்கு ஒன்று.**
- **100 ரூபாய் 100 காய்கறிகள்...**
- **எண்ணிக்கையை நீங்கள் சொல்லுங்களே**



**மூளைக்கு வேலை** சென்ற இதழ் கேள்விக்கான விடை : 63 -வது நாள்.

**முக்கிய நினைவு தினங்கள்**

5, 1821 – நெப்போலியன், பிரெஞ்சு அரசர், 13, 2001 – ஆர்.கே.நாராயண், எழுத்தாளர்.

# ஆன்மீகப்பெண்ணியவாதி
## -புனிதவதியார்

திருக்குறள் செம்மல் முனைவர் தெ. வாசுகி
உறுப்பினர்,
நாகை மாவட்ட ஆம்பல் தமிழ்ச்சங்கம் நிர்வாகி.



**முன்னுரை**

ஆணாதிக்கச் சமுதாயத்தை உருவாக்கியதில் சமயங்களுக்கும் பங்குண்டு. சமயங்களின் ஆதிக்கத்திற்குள் பெண்களும் வாழும் நிலை உள்ளது. எனவே சமயங்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவது இன்றியமையாதது என்று வாதிட்டு வருகின்றனர். மேலும் 1976இல் பெண்ணியத்தின் ஒரு கூறாக ஆன்மீகமும் சோக்கப்பட வேண்டும் என்ற கருத்தைப் பெண்ணியவாதிகள் வலியுறுத்தினர். ஆன்மீகப் பெண்ணியம் ($றர்ர்மவி சம்மன்) என்பது ஆண் மேலாதிக்கச் சமயங்களைப் புறந்தள்ளிவிட்டு, புதுப்புதுப்பெண் தெய்வ வழிபாட்டு முறைகளை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதேயாகும். ஆன்மீகவாதிகளாய் வாழ்ந்து தலைச்சிறந்த பெண்ணியவாதிகளாக திகழ்ந்த புனிதவாதியாரின் ஆன்மீகச் சிந்தனையைக் காணலாம்.

**புனிதவதியாரின் பக்தி நிலை**

வணிகர் குலத்தலைவரான தனதத்தனார் - தருமவதி ஆகியோரின் மகள் புனிதவதியார். திருமகளைப்போன்ற பேரழகு உடையவள். தளிர் நடை பயிலும் குழந்தைப் பருவத்திலிருந்தே சிவபெருமானின் திருவடிகளை வணங்கும் இயல்புடையவராக விளங்கி வந்தாள். மனதில் பெரும் சிவநேசம் ததும்ப மொழிகளும் பயின்றாள். சிறுமியருடன் விளையாடும் போதெல்லாம் சிவபிரானைப் பற்றிய மொழிகளையே பேசுவாள். சிவனடியார்களை வணங்கி மகிழ்வாள்.

**இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி**
**இறைவனே ஈண்ட இறக்கஞ் செய்வான் இறைவனே**
**எந்தாய் என இரங்கும் எங்கள் மேல் வெந்துயரம்**
**வந்தால் அது மாற்றுவான்**

என்று இறைவனையே முழுமுதலாகக் காணும் காரைக்கால் அம்மையின் (புனிதவதி) வாழ்வு இருநிலைகளைக் கொண்டதாக உள்ளது.

**மனைக்கு விளக்கு - முதல் நிலை:-**

தனதத்தனாருக்கும் தருமவதியாருக்கும் மகளாக பிறந்து சீரும் சிறப்போடும் வளர்ந்து பரமதத்தனுக்கு மனைவியாகி இல்லறக் கடமைகளை ஆற்றி மனைக்கு விளக்காய்த் திகழ்ந்தாள். இந்நிலையில் சிவனை நினைப்பது. வழிபடுவது ஆகியவை புனிதவதியாரின் அன்றாட நிகழ்வுகளாகும். உரிய வயதில் பெற்றோரால் மணமுடித்துத் தரப்பட்டாள். கணவனில்லத்தில் வீட்டிற்கு வரும் சிவனடியார்களுக்குத் திருவமுது அளித்து செழும் பொன். பொருள். துகில் என அவர்கள் வேண்டுவன வழங்கி சிவனைச் சிந்தையில் இருத்தி, பக்தி உடையவராய் வாழ மட்டும் புனிதவதியால் முடிந்தது.

**இறைத்தொண்டு - இரண்டாம் நிலை**



இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயில்களான திருக்கயிலை. திருவாலங்காடு போன்ற இடங்களுக்குச் சென்று இறைவனின் நெருங்கிய உறவாய் - சிவகணங்களுக்குள் ஒன்றாய் அருகிருந்து இறைவனின் திருநடன கோலங்கண்டு இன்புற்ற பக்தையாய் வாழ்ந்தார். இந்நிலையில் கணவனுக்காக முன் தாம் தாங்கிய அழகுடன் கூடிய தசைப்பொதி கழித்து வானமும், நிலமும் எல்லாம் வணங்கும் **"பேய்"** வடிவம் ஏற்பதும் அனுக்க உறவினரும் வணங்கி அகல முற்றதாக இவ்வுலக வாழ்விலிருந்து விடுபட்டு இறைத்தொண்டு ஒன்றனையே மேற்கொண்டு வாழ்ந்து வந்தார். **"பெண்"** வடிவத்தை விலக்கி **"பேய்"** வடிவம் ஏற்றது **"பெண்ணயவாதி'** யாகப் பரிமளித்ததை இனங்காட்டும் குறியீட்டுச் செயலாகும். அழகிப் போட்டிகள், தந்தை வழிச் சமூகப் பண்பாட்டின் வேண்டாத தன்மைகளை வெளிப்படுத்துவது என்று உலகெங்கும் பெண்ணியவாதிகள் இவற்றை நிராகரித்து கண்டனக்குரல் எழுப்பி வருகின்றனர்.



**அம்மையே என இறைவனை அழைத்தது**

திருக்கயிலை இறைவன் வாழும் தலம். புண்ணிய தலமாதலின் காலால் மிதித்து தகாது என்று தலையால் நடந்தாள். அம்மையின் பக்தியை வெளிப்படுத்த "அம்மையே என இறைவன் அழைத்து இவ்வான்மீகப் பெண்ணியவாதியின் மீது இறைவனாகிய சிவன் கொண்ட மதிப்பைப் புலப்படுத்தும் பெரியபுராணம் புனிதவதியாரை "மனைவியார்", "புனிதவதியார்" என மதிப்புடன் விளித்து கணவரை "அவன்" என்றும் "பரமதத்தன்" என்றும் ஒருமையில் விளிப்பது குறிக்கத் தக்கது.

**அம்மையாரின் திருப்பதிகங்கள்**

காரைக்காலம்மையாரின் அற்புத அந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களும் "பேய்கணஞ் சூழ சுடுகாட்டில் வாகை. சுள்ளி செறிந்து வெப்பம் மிக்கு ஈமத்தீயே விளக்காக அப்பன் ஆடும் அச்சமூட்டும் திருவாலங்காட்டுத் திருநடனத்தைப் பாடுபொருளாகப் பெற்றிருப்பது குறிக்கத் தக்கதாகும் இதனை,

**கொங்கை திரங்கி நரம் பெழுந்து**
**திண்டுகள் லென்பற் குழிலயிற்றுப்**
**பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு**
**பரடுயர் நீள்கணைக் காலோர் பெண் பேய்**
**தங்கி அலறி உலகுக்கு நாட்டில்**
**தாழ்சடை எட்டுத் திசைகள் வீசி**
**அங்கங் குளிர்ந்தவை ஆடும் எங்கள்**
**அப்பன் இடந்திரு ஆலங்காடே**

என்ற மூத்த திருப்பதிகம் பாடல் ஆலங்காட்டு ஆலயத்தினுள்ளே சென்று அங்கு அண்டமுற நிமிர்ந்தாடும் ஆண்டவனின் நடனக் கோலத்தைக் கண்டு தொழுதார் என்பதைச் சுட்டுகிறது. மேலும் "எட்டி இலவம் மீகை' என்ற பாடலடியெடுத்து "கொட்ட முழவம் கூனிபாடக் குழுகன் ஆடுமே" என்னும் முடிபினையுடைய திருப்பதிகத்தினைப் பாடிப் பணிந்தார். **"எந்தாய்'**, **"எந்தையே"** **"நம்பன்"**, **"நந்தாதை"** என்று யாவுமாய் சிவனையே கண்டுரைத்தார்.

**முடிவுரை:**

காலங்காலமாய் அடிமைத்தனத்தில் அடையாளமின்றி வாழ்ந்து வருவதையே வழக்கமாகக் கொண்டு விட்ட பெண்ணினத்தால் "பக்தி என்ற தனது அடையாளத்தை இழக்காமல் தனித்தத்தவத்துடன் பல இடையூறுகளைக் கடந்து நிலைப்படுத்திக் கொண்டு புனிதவதியார் ஆன்மீக பெண்ணியவாதியாய் நமக்கு தலைசிறந்த முன்மாதிரியாய் விளங்குகின்றனர். அதனால்தான் இன்று எல்லா கோவில்களிலும் சாதிமத இன வேறுபாடின்றி பெண்கள் அர்ச்சகராக, கோவில் நிர்வாகிகளாக, ஓதுவார் மூர்த்திகளாக திகழ்கின்றார்கள்.



**முக்கிய நினைவு தினங்கள்**

19, 1904 - ஜாம்ஷெட்ஜி டாடா - டாடா குழுமத்தின் நிறுவனர்.

INTEGRAL TRAINING CENTRE

# அடேங்கப்பா ப்ளஸ் -2 வகுப்பிற்கு பின் படிக்க இவ்வளவு வாய்ப்புகளா... என்ன படிக்கலாம் மாணவர்களின் பார்வைக்கு பயன் பெறுங்கள்

***Science Courses (3 Years)***

Bsc Physics
Bsc Chemistry
Bsc Botany
Bsc Zoology
Bsc Computer science
Bsc Mathematics
Bsc PCM
Bsc CBZ
Bsc Forestry
Bsc Dietician & Nutritionist
Bsc Home Science
Bsc Agriculture Science
Bsc Horticulture
Bsc Sericulture
Bsc Oceanography
Bsc Melsorology
Bsc Arthopology
Bsc Forensic Science
Bsc Food technology
Bsc Diary Technology
Bsc Hotel Management
Bsc Fashion Design
Bsc Mass Communication
Bsc Electronic Media
Bsc Multimedia
Bsc 3D Animation

***Commerce Courses :***

CA Chatted Account
CMA Cost Management Account
CS Company Secretary (Foundation)
B.Com Regular
B.Com Taxation &Tax Procedure
B.Com Travel & Tourism
B.Com Bank Management
B.Com Professional
BBA /. BBM Regular
BFM Bachelor of Financial Management
BMS
BAF

***Humanities Courses:***

Advertising
BS General
Criminology
Economics
Fine Arts
Foreign languages
Home Science
Interior Design
Journalism
Library Science
Physical Education
Political Science
Psychology
Social Work
Sociology
Travel and Tourism

***Management Courses:***

Business Management
Bank Management
Event Management
Hospital Management
Hotel Management
Human Resources Managemet
Logistics Management

***Law Courses (3/5 Years) :***

LLB,
BA+LLB
B.Com + LLB
BBM+LLB,
BBA. +LLB

***MEDICAL COURSES :***

MBBS
BUMS Unani
BHMS Homeopathy
BAMS Ayurveda
BSMS Sidha
BNYS Naturopathy
BDS Dental
BVSc Veterinary.

***PARAMEDICAL COURSES :***

Nursing
Pharm D
B.Pharm
D.Pharm
M. Pharm
Anesthesia technical
Cardiac Care technical
Perfusion technology
Cathllab technology
Clinical Optometry
Dental Hygiene
Dental Mechanic
Dental Technician
Health Inspector

**முக்கிய நினைவு தினங்கள்**

30, 1912 – வில்பர் ரைட், ஆகாய விமானத்தை உருவாக்கிய ரைட் சகோதரர்கள்

Medical imaging & Tech...
Medical Lab technician
Medical Records tech
Medical X Ray Technician
Nuclear Medicine Tech
Occupational Therapist
Operation theater Tech
Ophthalmic Assistant
PHYSIOTHERAPY
Radiographic Assistant
Radiotherapy Technician
Rehabilitation Therapy
Respiratory Therapy Tech.
Blood Transfusion Tech..
Bsc Renal Dialysis

***B.Tech Engineering (4year):***

Petro chemical Engineering
Petroleum Engineering
Civil Engineering
Mechanical Engineering
Aeronautical Engineering
Aerospace Engineering
Agricultural Engineering
Architecture Engineering
Automobile Engineering
Automation & Robotics Eng.
Avionics Engineering
Biomedical Engineering
Bio technological Eng..
Chemical Engineering
Ceramics Engineering
Computer Science Engi..
Electronics &Comm.Engi.
Electrical & Electronics Engi.
Environmental Science Engi.
Information Science Engi
Industrial Engineering
Industrial Production Engi..
Instrumental Technology
Marine Engineering
Medical Electronics Engi..
Mining Engineering
Manufacturing Science Engi.
Naval Architecture Engi....
Nanotechnology Engi..
Polymer Technology Engi..
Silk Polymar Engi...
Carpet Technology Engi...
Textile engineering
Robotics
Genetic

***POLYTECHNIC (10 th class) :***

Civil engineering
Mechanical engineering
Automobile engineering
Computer science engi.....
Electronics and communication Engineering
Electrical engineering
Petro chemical engineering

***MANAGEMENT***
(new job opportunity Courses 2/3/5Years Duration):

BBA /BBM
BBA Aviation
BBA Air Cargo Management
BBA Aeronautical
BBA Retail Marketing
BBA Customer Care Management
BBA Airline & Airport Management
BBA Cargo Management
BBA Office Management
BBA Store Management
BBA Mall Management
BBA Logistics

***BCA SAP***
BCA Cloud Computing

***MBA Logistics***
Aviation
HR
Management

***Architecture (5 years +2)***
B.Arch (NATAis Compulsory)
M.Arch .

**பயிலும் மாணவர், மாணவியர்கள் தங்களது பெற்றோர்களுடன் கலந்தாலோசித்து தம்மால் முயலும் நல்லதொரு பிரிவை தேர்ந்தெடுத்து பயில்வதற்கு**




**முக்கிய நினைவு தினங்கள்**
24, 1543 – நிக்கோலஸ் கோபர்னிகஸ், போலந்து நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி.

# World Telecommunication Day




***World Telecommunication Day***

The day had previously been known as 'World Telecommunication Day' to commemorate the founding of the International Telecommunication Union on 17 May 1865.It was instituted by the Plenipotentiary Conference in Malaga-Torremolinos in 1973.

The main objective of the day was to raise global awareness of social changes brought about by the Internet and new technologies. It also aims to help reduce the digital divide.

***World Information Society Day***

World Information Society Day was an international day proclaimed to be on 17 May by a United Nations General Assembly resolution, following the 2005 World Summit on the Information Society in Tunis.

***World Telecommunication and Information Society Day***

In November 2006, the ITU Plenipotentiary Conference in Antalya, Turkey, decided to celebrate both events on 17 May as World Telecommunication and Information Society Day.

# OUR NURSES OUR FUTURE



The International Council of Nurses (ICN) has celebrated this day since 1965. In 1953 Dorothy Sutherland, an official with the U.S. Department of Health, Education and Welfare, proposed that President Dwight D. Eisenhower proclaim a "Nurses' Day"; but he did not approve it.

In January 1974, 12 May was chosen to celebrate the day as it is the anniversary of the birth of Florence Nightingale, the founder of modern nursing. Each year, ICN prepares and distributes the International Nurses' Day Kit. The kit contains educational and public information materials, for use by nurses everywhere. As of 1998, 8 May was designated as annual National Student Nurses' Day.

# ICN themes for International Nurses Day



1988 – Safe Motherhood
1989 – School Health
1990 – Nurses and Environment
1991 – Mental Health – Nurses in Action
1992 – Healthy Aging
1993 – Quality, costs and Nursing
1994 – Healthy Families for Healthy Nation
1995 – Women's Health: Nurses Pave the Way
1996 – Better Health through Nursing Research
1997 – Healthy Young People = A Brighter Future
1998 – Partnership for Community Health
1999 – Celebrating Nursing's Past, claiming the future
2000 – Nurses – Always there for you
2001 – Nurses, Always There for You: United Against Violence
2002 – Nurses Always There for You: Caring for Families
2003 – Nurses: Fighting AIDS stigma, working for all
2004 – Nurses: Working with the Poor; Against Poverty
2005 – Nurses for Patients' Safety: Targeting counterfeit medicines and substandard medication
2006 – Safe staffing saves lives
2007 – Positive practice environments: Quality workplaces = quality patient care
2008 – Delivering Quality, Serving Communities: Nurses Leading Primary Health Care and social care
2009 – Delivering Quality, Serving Communities: Nurses Leading Care Innovations
2010 – Delivering Quality, Serving Communities: Nurses Leading Chronic Care
2011 – Closing The Gap: Increasing Access and Equity
2012 – Closing The Gap: From Evidence to Action
2013 – Closing The Gap: Millennium Development Goals
2014 – Nurses: A Force for Change – A vital resource for health
2015 – Nurses: A Force for Change: Care Effective, Cost Effective
2016 – Nurses: A Force for Change: Improving Health Systems' Resilience[4]
2017 – Nurses: A Voice to Lead – Achieving the Sustainable Development Goals
2018 – Nurses: A Voice to Lead – Health is a Human right
2019 – Nurses: A Voice to Lead – Health for All
2020 – Nurses: A Voice to Lead – Nursing the World to Health[6]
2021 - Nurses: A Voice to Lead - A Vision for Future Healthcare
2022 - Nurses: Make a Difference
2023 - Our Nurses. Our Future

# HOPE FOR THE BEST

- *Ilakkiya R*
Co Ordinator,
Covai Aaambal Tamil Sangam



Sufferings make beautiful scars
There is nothing behind bars
Turn the worst to the best
Hope is resided to protest

Changes are inevitable
Turning pain to pleasure is reputable
Struggle hard without rest
Never put yourself under arrest

Agony is not to despise; it's objectionable
Aspire to inspire; it's unquestionable
Commemorate the pain with zeal
That's the greatest way to heal

Misery will not endure
That is what all can assure
Delight can be afforded by none
It is within ourselves with fun

Make your mind free; do not annoy
Cross the dark Ocean with joy
God has given us a warrant
Have faith in yourself, that's constant

# GRAMMAR GAMES

***FIND THE HOMOPHONES FOR THE GIVEN WORDS***

***Homophones are words that sound the same and may be spelled differently but have different meanings.***




**heal - I hope the cut will heal quickly.**

**heel - The heel of Jane's shoe was worn.**

**Other common homophones:**

**cent, scent**

**cell, sell**

**be, bee**

**eye, I**

**hear, here**

**mail, male**

**pair, pear**

**sew, so**

**to, two, too**






**Send the Answers to Following Email : contest@aambaltamilsangam.com.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **1.** |  | = | ? | **6.** |  | = | ? |
| **2.** |  | = | ? | **7.** |  | = | ? |
| **3.** |  | = | ? | **8.** |  | = | ? |
| **4.** |  | = | ? | **9.** |  | = | ? |
| **5.** |  | = | ? | **10.** |  | = | ? |

# இலக்கியச் சங்கமம்
## மே மாத இதழ் கேள்விகள்

1. வைஷ்ணவி ஆலயத்தில் திருப்புகழ் வகுப்பு நடத்தும் குழுவின் பெயர் என்ன?
2. மம்மியின் காலத்தை துல்லியமாகக் கணிக்கப் பயன் படுத்திய தொழில்நுட்பம் எது?
3. கவி என்பதற்கு கீர்த்தி சொன்ன பொருள் என்ன?
4. சாப்பாட்டாலே சாகடிக்கும் ஊர் என்று கண்ணதாசன் குறிப்பிட்ட ஊர் எது?
5. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ? என்று கூறியவர் யார்?
6. ஆயுள் காப்பீடு செலுத்துவதன் மூலம் எவ்வளவு ரூபாய் வரை வரிச் சலுகை பெறமுடியும்?
7. மகனின் முதல் மாத சம்பளம் எவ்வளவு?
8. உடலில் உறுதி உடையவரே உலகில் இன்பம் உடையவராம் என்று கூறியவர் யார்?
9. what is the theme of ICN in 2000?
10. what is the main objective of tele communication day?

மேற்கண்ட கேள்விகளுக்கான பதில்களை contest@aambaltamilsangam.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

## தூத்துக்குடி ஆம்பல் தமிழ்ச் சங்க நிர்வாகிகள்



Mrs. **D.Jeyabharathi**
District President
Aambal Tamil Sangam



Mr. **S.Thangamariappan**
Vice President
Aambal Tamil Sangam



Ln. **Jeyasree**
Secretary
Aambal Tamil Sangam



Dr. **K. Maheswari**
Co ordinator
Aambal Tamil Sangam,



**Dr. N.N.Krishnaveni,**
Co ordinator
Aambal Tamil Sangam



**V.J.Jananya**
Student Co ordinator
Aambal Tamil Sangam

# ஆம்பல் தமிழ்ச்சங்கம்

நல்லதைப் பார்த்து, நல்லதைக் கேட்டு, நல்லதைப் படித்து, நல்லதை பகிரும் எண்ணத்துடன் 2004 வருடம் துவங்கப்பட்டு வேலை தேடுபவர்களை, பல்வேறு நிறுவனங்களில் காலியாக உள்ள வேலைகளுடன் இணைக்கும் பணியில் எந்தவொரு பண பரிவர்த்தனைகள் எதுவும் இல்லாமல் இலவச சேவைத்தளமாக 2004 யில் துவங்கப்பட்டுகிட்டத்தட்ட 15000 கிற்கும் அதிகமானவர்களை வேலையில் அமர்த்தி அவர்களின் குடும்பங்களில் விளக்கை ஏற்றி வரும் வழிகாட்டும் ஒரு கலங்கரை விளக்கம்.

ஆம்பல் தமிழ்ச்சங்கம் முறையாக பதிவு செய்யப்பட்டு உள்ளூர் திறமைகளை உலக மேடைகளுக்கு கொண்டு செல்லும் வகையில் அறிவோம் ஆயிரம், அருகாமையில் ஆளுமைகள், மற்றும் ஒரு குடைக்குள் மழை என்கிற தலைப்புகளின் கீழ் பல்வேறு நிகழ்ச்சிகளை இணைய வழியில் செய்து வருகிறது.

அறிவோம் ஆயிரம் - கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்பதற்கு இணங்க நாம் நிறைய கற்க வேண்டும் என்ற எண்ணத்தில் இசை வகுப்புகள், யோகா வகுப்புகள், மொழி வகுப்புகள், கணிதம், அறிவியல், போட்டித் தேர்வுகள் மற்றும் பாடம் சார்ந்த வகுப்புகள் என்று ஏழு கண்டங்களில் உள்ள 64 நாடுகளை இணைத்து 5000 க்கும் மேற்பட்ட முனைவர்களையும் 10000 க்கும் மேற்பட்ட ஆசிரியர் பேராசிரியர்களையும் 25000 க்கும் மேற்பட்ட மாணவர்களையும் இணைத்து இலவச பாடங்கள் போதிக்கிறோம்.

அருகாமையில் ஆளுமைகள் - தனக்கு உள்ள திறமைகளையும் தன் குடும்பம் நண்பர்கள் மற்றும் சுற்றம் என தன்னை சுற்றியுள்ளவர்களின் திறமைகளை உணர வைத்து அதை உலக மேடைக்கு கொண்டு செல்லும் ஒரு தளமாக விளங்குகிறது.

ஒரு குடைக்குள் மழை - ஏழு கண்டங்களில் உள்ள 64 நாடுகளை இணைத்து 5000 க்கும் மேற்பட்ட முனைவர்களையும் 10000 க்கும் மேற்பட்ட ஆசிரியர் பேராசிரியர்களையும் 25000 க்கும் மேற்பட்ட மாணவர்களையும் இணைத்து, இணைய வழியில்தொடர்ந்து 30 மணி நேரம் பட்டிமன்றம் 25 மணி நேரம் இசைக்கருவிகள் வாசித்தல் 51 மணி நேரம் தந்தைக்கு கடிதம் எழுதுதல் 57 மணி நேரம் நாட்டுப்புற கலைகள் வளர்த்தல் 72 மணி நேரம் நடனம் ஆடுதல் 145 மணி நேர பட்டிமன்றம் 1330 திருக்குறள் மனித எழுத்து வடிவில் 709 மாணவிகளை நிற்க வைத்து, திருக்குறளை எழுதி சொல்ல வைத்த சாதனை என்று பல்வேறு சாதனைகளை உள்ளிட்ட 37 உலக சாதனை நிகழ்ச்சிகளை வடிவமைத்து ஒருங்கிணைத்து உலக சாதனையை படைத்திருக்கிறது.

## ஆம்பல் தமிழ்ச்சங்க நிர்வாகிகள்



Dr. **Nalini Parthasarathy**
Managing Director
Aambal Tamil Sangam



Mrs.**Saraswathi Arikrishnan**
Canada
Aambal Tamil Sangam



Mrs.**Vijithambikai**
Switzerland
Aambal Tamil Sangam



Mrs. **Tamilchelvi Manickam**
Malaysia
Aambal Tamil Sangam,



**Rohini Etobicoke**
Canada
Aambal Tamil Sangam



Mrs. **Princeia Michaela**
California
Aambal Tamil Sangam



Mrs. **Lilith Kris**
Autowa, Canada
Aambal Tamil Sangam